




| சிலம்பு | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௫, சித்திரை | பரல் |
| --- | --- | --- |
| உஅ | மே, 1954 | ௯ |



# பெண்ணாகடம் தமிழ் ஆட்சிமொழி மாநாடு

உலகில் பல்வேறு வகை மொழிகள் வழங்கிவந்தன, வருகின்றன அவை பல்லாயிரம் ஆண்டுகளாக வழங்கிவருவன; இடைப்பட்ட காலத்தில தோன்றி வழங்கிவருவன, தோன்றி மறைந்தன, நாட்டு வழக்கற்று ஏட்டு வழக்கில் நிற்பனவாகிய பல்வேறு வகையின ஆகும்.

இவற்றுள், உலக வழக்கினும் செய்யுள் வழக்கினும் நின்று நிலவுவதும் மக்கள் தோன்றி வாய்திறந்த காலத்தே பிறந்த பழமையானதும, மெல்லிய இனிய மேவரு தகுநவாகிய சொற் கூட்டங்களைக் கொண்டதும, இலக்கண இலக்கிய வரம்புள்ளதும் என்றுமுள நம் தென்றமிழ் மொழி யொன்றேயாகும்.

இத்தகைய பண்பு வாய்ந்த நம் தமிழ்மொழி, நாட்டில்—தான் பிறந்தநாட்டில்—ஆட்சிமொழியாதற்குரிய சிறப்பினை இது காலை இழந்து நிற்கின்றது. இதன் கிளைமொழிகளான தெலுங்கு கன்னடம போன்ற மொழிகள் தம் நாட்டில் இன்று ஆட்சி மொழி ஆக நிலவி மேலோங்கி வருகின்றன. நம் தமிழ்மொழி மட்டும் நாடு விடுதலைபெற்றும் ஆட்சிமொழியாகக் கொள்ளப் பெரிதும தயங்கி நிற்கின்றது. அதற்குக் காரணம, பன்மொழிக் கூட்டுறவான சட்ட அவையும், மொழிப்பற்று, நாட்டுப்பற்றற்ற போலிமக்களின் ஆர்வமில்லாக் குறைவும், எதற்கெடுத்தாலும் தமிழமொழி ஆக்கத்துக்குக் கேடுசூழும் கொள்கையினரும் பல்கி யிருப்பதுமேயாம்.

# பெண்ணாகடம் தமிழ் ஆட்சிமொழி மாநாட்டு
# நிகழ்ச்சிக் குறிப்புக்கள்

[தொகுத்துதவியவர் : திரு பழம் நீ]

பெண்ணாகடம் முத்துக்குமரப் பூங்காவில் நடைபெற்ற இம் மாநாட்டில தென்னாற்காடு மாவட்டததைச சோநத பல சங்கங் களின் பிரதிநிதிகளும், பெருமபாலான மாணவமணிகளும கலநது கொண்டார்கள்.

முன்னாள் அமைச்சா ஓ. பி. இராமசாமி ரெட்டியார் ஊர் வலத்தை ஆரமபிததுவைத்தாா. யானையின்மீது தமிழ்க் கொடி அமைதது மாநாட்டுத தலைவர்கள் உநதுவணடியில் அமாநது வர ஊர்வலம் மிகவும சிறப்பாக நடைபெற்றது. திரு. சிவ. பழமலை வரவேற்புரை நிகழ்த்தினார்.

தலைவர், கசபதி நாயகர், M. L. C. அவர்கள் தலைமை உரையில் கூறியதாவது :—பதினான்கு மாவட்டங்கள கொண்ட மாகாணததில் 12 மாவட்டங்கள முழுவதும் தமிழ பேசும மக் கள் இருககின்றனர். ஆநதிராவில் இபபோது தெலுங்கு ஆட்சி மொழியாயுள்ளது அதைப்போல் தமிழ் நாட்டிலும தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் தமிழ் ஆட்சி மொழியாவதற்குச் சட்டம் இடந்தருகிறது. எம். எல். ஏக்கள தமது கட்சி மனப் பான்மையை விட்டுத் தங்களைத தேர்நதெடுத்த பாமரத் தமிழ ருக்குக கடமையைச் செய்ய முன்வர வேண்டும.

திரு. ஓ. பி. இராமசாமி ரெட்டியார் மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசியதாவது :—

நான் ஒரு சாதாரண விவசாயி. கிராமிய முறையிலே இருந்து கொண்டு நான் பேசுகிறேன். ஆன்ம நேயததோழர் களுக்கு ஆன்ம நேய ஒருமைப்பாடு வேண்டும் தமிழர்களுக்கு உணர்ச்சி வேண்டும. உணாசசி மிகுதியாகவும் இருக்ககூடாது; ஆனல், இப்போது உளளதுபோல குறைவாகவும் இருககக் கூடாது, மாநாடு திறந்தே இருக்கிறது. உங்கள் உள்ளததைத் தான் திறக்கவேண்டும். கடமையில் கருத்து, நேர்மை, நாண யம், ஒழுங்குமுறை, கட்டுப்பாடு, இவைகள எல்லாம் வேண்டும். தலைமைப் பதவிக்காகப் போட்டி போடுதல் கூடாது. நாம் அனைவரும் சேர்நது ஆக்க வேலைகளில் ஈடுபடவேண்டும. சண்டை போடும போதாவது ஒன்றுபடவேண்டும். புதை பொருள் ஆராய்ச்சியாளர்கள் புதை பொருளைக் கண்டுபிடித்துத் தமிழர்களின் சிறப்பைப்பற்றிப் பஞ்சாபிலே பேசுகிறார்கள. மலை

யாளத்திலே சங்க இலக்கிய வார்த்தைகள் பேசப்படுகின்றன. செந்தமிழ் முருகன் அருளால் தமிழ் ஆட்சிமொழியாகவேண்டும். எல்லாத் துறைகளிலும் தமிழர்கள் முன்னேறவேண்டும்.

பல்லாயிரக்கணக்கான மக்களின் முன்னிலையில் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் தமிழ்க் கொடியை ஏற்றிவைத்துப் பேசியதாவது:—இன்றைய தமிழகம 2 லட்சத்து 50 ஆயிரம் நாற்புற மைல்கள பரப்பளவையுடையது தமிழ் மக்களின் எண்ணிக்கை 3 கோடி.

தமிழ் நாட்டின் வட எல்லை ஆந்திரத்திற்கு அடிமையாயிற்று. தென் எல்லையை மலையாளம் கொள்ளை கொண்டது மேற்கெல்லை கன்னடத்தில் மறைந்து விட்டது கிழக்கெல்லை பிரெஞ்சுக்குச சொநதச சொத்தாயிற்று. நடுவில் தமிழகம கூனிக் குறுகிப் போயிற்று. இதற்கும தமிழ்நாடு என்று பெயரிலலை. எஞ்சிய சென்னை மாகாணமென்று முன்பும், வெறுஞ் சென்னை மாகாணமென்று பின்பும் கூறுகின்றனர் இவ்வாறு கூறுகின்றவர்களை ஏன்? என்று கேட்க நாதியுமில்லை. இது இன்றுள்ள தமிழ்நாட்டின் நிலை தமிழ்நாட்டினரைத் தவிரப் பிற நாட்டினரெலலாம தங்களை, ஆந்திரா, வங்காளி, பஞசாபி, மலையாளி எனறே கூறுகின்றனர் தமிழன் மட்டும இன்னும் தன் சாதிப் பெயரையும, வாழும் ஊரையுமே கூறிக்கொண்டிருக்கிறான். "தமிழ்நாடு" என்றோ "தமிழன்" என்றோ கூறுகின்ற உணர்ச்சி சிறிதுமில்லை. இதுவே இன்றைய தமிழ் நாட்டின் நிலை.

## தீர்மானங்கள்

(க) தமிழகத்துக்குத் தமிழ்மொழியே ஆட்சிமொழியாக இருக்கவேண்டுமென்று சட்டம் இயற்றி ஆவன செய்யுமாறு சென்னை சட்டசபைகளின் உறுபபினர்களையும அரசாங்கததாரையும் இம மாநாடு வற்புறுத்துகிறது.

(உ) ஆந்திரம் பிரிந்தபிறகு தமிழகத்தை 'எஞ்சிய செனனை' என்று பெயரிட்டு வருவதைக் கண்டு இம் மாநாடு வருநதுவதுடன், தமிழ்நாடு என்றே பெயரிட வேண்டுமென இம் மாநாடு ஆட்சியாளரைக கேட்டுக்கொள்ளுகிறது.

(ங) சென்னை சட்டசபை நடவடிக்கைகளில் தமிழக உறுப்பினர்கள் அனைவரும் தமிழிலேயே பேச வேண்டுமென்று இம் மாநாடு கேட்டுக்கொளளுகிறது.

(ச) அரசாங்கத்துக்கு எழுதும் விண்ணப்பங்கள், கடிதப் போக்குவரவுகள் அனைத்தையும தமிழிலேயே எழுதி அனுப்ப வேண்டுமென்று இம் மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

# கலைக்களஞ்சிய வெளியீட்டு விழா

நம் ஒண் தீந்தமிழ்க்கண் முதல்முதல் அறிவுக்கருவூல மாகிய தமிழ்க் 'கலைக் களஞ்சிய'த்தின் முதல் தொகுதி வெளி யீட்டு விழா இச் சயஆண்டு சித்திரைத் திங்கள் க (13-4-1954) ஆம் நாள் பிற்பகல் சென்னைப் பல்கலைக் கழகக் கட்டிடத்தில் நிகழ்வுற்றது.

தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு தி. சு. அவிநாசி லிங்கஞ் செட்டியாரவர்கள விழாவிற்குத் தலைமை யேற்றார். ஏராளமான அறிஞர் பெருமககளும தமிழன்பாகளும் குழுமி யிருந்தனர்.

தலைமை யேற்ற அவிநாசிலிங்கஞ் செட்டியார் தலைமை யுரைக்கண் குறிப்பிட்டதாவது :

'தமிழ்மொழி மிகவும் பழைமையானது; உலகம் போற்றும் சிறந்த காவியங்களையுடையது. எனினும், இச்சிறப்புக்களுடன் தற்கால வாழ்ககைக்குரிய பிற கலைச் செல்வங்களும தமிழிற்கு இன்றியமையாதனவாகும். எல்லாத துறைகளிலும் உயர்ந்த அறிவுபெறற்கு உதவியாக இருக்கக் கலைக களஞ்சியம் ஒன்று, தமிழில் வெளிவரவேண்டும் என்பது தமிழ் அறிஞர்களின் நெடு நாளைய அவாவாகும். ஆனல், இது வெளியிடுதற்கு ஏராளமான தொகையும், இநத வேலையின் சிறந்த தன்மையும கடக்க முடி யாத மலைகளபோலத தோன்ற இப்பணியை நடைபெற வொட்டாமல் தடுத்தன.

1947 இல் தமிழ்வளர்ச்சிக் கழகம் ஏற்பட்டது. அவ் ஆண்டு ஆகஸ்டுத் திஙகள் 15 ஆம் நாள் நம் இந்திய நாடு முழு உரிமை பெற்ற நாள். அன்று நாடு முழுவதும் மக்கள் மனத் தில் பெருமகிழ்வு பூத்துக் கரைபுரண்டு ஓடிற்று. மக்கள் உள் ளத்தில் பொஙகியெழுநத மகிழ்வுவெள்ளத்தைச் செயலென் னும் வாய்க்கால் வழியே கரைகோலிச செலுததினல் நற்பயன் விளையும் என்ற எண்ணம் எனக்குத் தோன்றிற்று. அது காலைக் கலைக்களஞ்சியம் ஒன்றை ஆக்கும் அரிய வேலையில் நாம் ஈடுபடவேண்டுமென்ற அறிக்கை யொனறைத் தன்னுரிமை நன் னட்கு முதல்நாள் வெளியிட்டிருநதேன். நண்பாகள் அனை வரும் அதை அன்புடன் வரவேற்றார்கள். தமிழன்பர்கள் பலர் அதற்கு உதவி செய்ய முன்வந்தனர்.



தமிழ் வளர்ச்சிக் கழகத்
தலைவர்
திருவாளர்,
தி. சு. அவினாசிலிங்கம்
செட்டியார் அவர்கள்
பி.ஏ., பி.எல்., எம்.பி.



கலைக்களஞ்சியத் தலைமை
ஆசிரியர்
திருவாளர்,
பெ. தூரன் அவர்கள்
பி.ஏ., எல்.டி.

முதல் முதல் டாக்டர், திரு. ஆர். எம் அழகப்ப செட்டியார் பதினையிரம் ரூபா, தருவதாக வாக்களித்தனர். இராசாசர், திரு எம். ஏ. முத்தையா செட்டியாரும, தருமபுர ஆதீனத் தலைவரும் இவ்வரிய பணிக்குத் தனித்தனியே அதே தொகையைத் தந்துதவினர். காலஞ் சென்ற திரு. டி. ஏ இராமலிங்கஞ் செட்டியார், திரு. கருமுத்து. தியாகராசச செட்டியாா, திரு. ட்ரோசன அண்ணுமலைச் செட்டியார், திரு. ரா கிருஷ்ண மூர்த்தி, திரு. வி. எஸ. தியாகராச முதலியார், திருவாவடுதுறை ஆதீனத தலைவர், திரு நா. ம. ரா. சுப்பராமன முதலியோரும் பெருந தொகை உதவினுர்கள. இரண்டுநாட்களில் இலட்சத்துக்கு மேற்பட்ட தொகை சேர்ந்தது.

1947 ஆம் ஆண்டு அக்டோபர்த் திஙகள் கலைமகள்விழா (விசயதசமி) நன்னுளில கலைக்களஞ்சியப்பணி சென்னைப் பல்கலைக்கழகக் கட்டிடத்தில் தொடங்கியது இப்பணிக்கு என்ன செலவாகுமென்பதைக் கணக்கிட்டுப் பார்த்ததில் ஏறக்குறையப் பதினன்கு இலட்சம ஆகுமெனத் தோனறிற்று. சென்னை மாநில அரசியலார் ஆண்டொன்றுககு ஒரு இலட்சமாக ஐந்து இலட்சத்துககு மிகாமல், தமிழ்வளாச்சிக் கழகத்தா திரட்டும் தொகைக்கு இருமடங்கு வழங்குவதாக அன்புடன் இசைநதார்கள். அதுகாலை மததிய மாநில அரசினர் நிதியமைச்சராக இலகிய காலஞ் சென்ற, டாக்டா. திரு ரா. க. சண்முகஞ்செட்டியாா ஒத்துழைப்பால, அவ்வரசினர் ஆண்டொன்றிற்கு எழுபத்தையாயிர ரூபாவாக, நான்காண்டுகள்வரை அளிப்பதாக வாக்களித்தனர். திருப்பதித் தேவத்தானததார் மிகுந்த அனபுடன் ஐம்பதினுயிர ரூபா வழங்கியுளளார்கள. வேறு பல அன்பர்களும சிறிதும பெரிதுமான தொகைகளை, வழங்கினுர்கள். சென்னைப பல்கலைக்கழகததார் இப்பெரும் பணியை ஆற்றுதற்கு இடங்கொடுத்துதவினுர்கள். இவர்கள் எல்லோருக்கும் எங்கள் நன்றியுரியது.

இவைகளை ஒழுங்குபெறச் செய்யத் திட்டம் வகுக்க, டாக்டர் திரு. ஏ. இலட்சுமணசாமி முதலியார் தலைமையில் ஓர் திட்டக் குழு அமைக்கப்பட்டது அதன்பின துறைக்கு ஒரு குழுவும நிறுவப்பட்டது. கட்டுரைகளை ஆய்தற்கும, பதித்தற்கும் பல குழுக்களும் நிறுவப் பெற்றுள்ளன. பல துறைகளில் எடுததுச் சொல்ல வேண்டிய கருத்துக்கள், எண்ணஙகள், பெயாகள் முதலியன, தமிழில் இல்லாமையால் அவைகட்கு ஏற்ற இடங்களில் தமிழில் கலைசசொற்கள் உண்டாக்க வேண்டியிருநதன. இன்றியமையாத இடங்களில் ஆங்கில மொழியில் உள்ள குறிகளையும் பெயர்களையும் தமிழ்மொழிக்கேற்றவாறு

அமைக்கவேண்டியதாயிற்று. இதில் பணியாற்றிய பெருமக்கள் தாய்மொழியின்பாலுள்ள பேரன்பால் இடையறாது பணிபுரிந்து வந்துள்ளனர். அவர்கட்கு எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இப்பணி தொடங்கி ஆறாண்டுகள் ஆகி ஏழாம் ஆண்டு நடந்துகொண்டிருக்கிறது. இன்னும் மூன்று ஆண்டுகளில் எல்லாத் தொகுதிகளும் வெளிவருமென எதிர்பார்க்கின்றோம். ஆங்கிலத்தில் 'சேம்பர்ஸ் என் சைக்ளோ பீடியா' வெளிவர 10 ஆண்டுகளும் 'என் சைக்ளோ பீடியா பிரிட்டானிகா'வின் 9 ஆம் பதிப்பைத் திருத்தியமைப்பதற்கு 15 ஆண்டுகளும் ஆகியிருக்கின்றன. சப்பான் மொழியில் 10 தொகுதி கொண்ட கலைக் களஞ்சியம் வெளிவர 12 ஆண்டுகளும், இத்தாலிய மொழியில் கலைக் களஞ்சியம் வெளிவர 9 ஆண்டுகளும் ஆகியிருக்கின்றன. தமிழ் மக்கள் அறிவுத்துறையில் உயரவேண்டுமென்பது எங்கள் வேண்டுதல். தமிழ்மக்கள் இதையேற்று வாழ்த்தியருள்வார்களாக,' எனக்கூறி முடித்தார்.

பின்பு சென்னைப் பல்கலைக் கழகத்துணை வேந்தர், டாக்டர் திரு ஏ இலட்சுமணசாமி முதலியார் தெலுங்கில் இவ்வாறு கலைக்களஞ்சியத் தொகுதிகள் வெளிவர விருப்பதாகக் கூறிக் கலைக்களஞ்சியச் செயற்குழுத் தலைவர் திரு. பெரியசாமித்தூரனவர்களைப் பாராட்டிப்பேசினார் அப்பால் கல்வி அமைச்சர் திரு சுப்பிரமணியம், பேராசிரியர் திரு. ரா பி. சேதுப்பிள்ளை, 'கல்கி' ஆசிரியர் திரு ரா. கிருஷ்ணமூர்த்தி முதலியோர் கலைக் களஞ்சியத்தின் சிறப்புகுறித்துப் பேசினார்கள். 'வாழிய செந்தமிழ்'ப் பாட்டுடன் விழா இன்புடன் முடிந்தது.

—செல்லூர்க்கிழார்.

---

# இருகுறட் பொருண்மை

[திரு பி. எல். சாமி. பி. எஸ்ஸி.]

(க) "தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை." (திருக்குறள் : ருரு)

கற்புத் திறத்தை வலியுறுத்தவே வள்ளுவர் இக் குறளைக் கூறினார் என்று பொதுவாக எல்லோரும் கூறுகின்றனா. மணிமேகலை, கலித்தொகை முதலிய நூல்களிலும் வள்ளுவர் கருத்து எடுத்தாளப்படுகின்றது. கணவனைத் தொழுது பெய்யென்றால் மழை பெய்யும் என்ற எளிய கருத்தை வள்ளுவர் இக் குறளில் கூறினார் என்று கருதி அந்த அளவில் நின்றுவிட முடியுமா? வள்ளுவர் தம் காலத்தில் வழங்கிய கதைகளை எடுத்துக் கையாண்டு அவைகளின்மூலம் ஆழ்ந்த கருத்துக்களைக் கூறுகின்றார். 'இந்திரனே சாலும் கரி,' என்ற வரியின்மூலம் ஐம்புலன்களை அடக்க வேண்டியதின் இன்றியமையாமையை எடுத்துக் கூறினார் இந்திரன் கதையைக் கூறினதால் வள்ளுவர் அதை நம்பினார் என்றோ, வடநூற்புராணக் கருத்தைப் போற்றுபவர் என்றோ கூறுவது பொருந்தாது. பொதுமக்களிடை வழங்கிய கதையைக் கருத்துத்தெளிவுக்குக் கையாண்டார் என்ற அந்த அளவில் நின்றுவிடவேண்டும். ஆனால், சிலர் இதை வைத்துக்கொண்டே வள்ளுவரின் வடமொழிக் கடப்பாட்டைப் பற்றியும் வைதிக மதக் கோட்பாட்டைப்பற்றியும் கதையளப்பர்.

மேலே சொன்ன குறளில் வள்ளுவர் பொதுமக்களிடையே வழங்கிய ஒரு நம்பிக்கையைக் கையாண்டு, அதன்மூலம் ஒரு உயர்ந்த, சிறந்த, முக்காலத்துக்கும் பொருத்தமான உண்மையைக் கூறினார் என்றே கொள்ளவேண்டும். பெண் ஏன் தெய்வந்தொழ வேண்டியதில்லை? எல்லாங் கடந்த ஒன்றே கடவுள். அக் கடவுளை உணர்ந்து ஒன்றுபட இருவழிகள் உள்ளதாகப் பெரியோர் கூறுகின்றார்கள். ஒன்று 'ஞானவழி,' மற்றொன்று 'பக்தி வழி.' புத்தர், ஆண் பெண் இருபாலாருக்கும் எல்லாங் கடந்த ஒன்றை உணர இந்த இருவழிகளையே காட்டுகின்றார். அரவிந்தரும் அதையே கூறியிருக்கின்றார். இவ்வழிகளில் 'அறிவு வழி,' ஆண்களுக்கு ஏற்றதென்றும், 'பற்று வழி,' பெண்களுக்குப் பொருந்தியதென்றும் கருதுகின்றார்கள். பக்தி வழி, பெண்களுக்குச் சிறந்தது என்பதையே வள்ளுவர் இக் குறளில் கூறியிருக்கின்றார் என்று கருதவேண்டும்.

பொதுவாக ஆண், ஒப்பற்ற ஒன்றை உணர அறிவையே துணையாகக் கொள்கிறான். அதனால்தான் அவன் பெண்ணைவிடக்

கூடுதலான உரிமையும் விடுதலையும் வேண்டுகின்றான். ஆனால் பெண்ணோ பரம்பொருளைக் கட்டுத்தளைகள் (பந்தங்கள்) வாயி லாகவே உணர்கின்றாள் என்று புத்தா கூறுகின்றார். ஆதலின், ஆண், கட்டுத்தளைகளைக் கழற்றியெறிந்து காண முயலும்போது, பெண், கட்டுத்தளைகளைத் தழுவி எழுந்து காண்கினறாள். பற்றை ஒழித்துப் பற்றற்றதைக காண்கிறான் ஆண் ஆனால், பெண் அப் பறறினைப்பற்றிப் பற்றற்றதைப் பாாக்கின்றாள்.

புத்தர், மனைவிமுதலிய தளைகளைத் தள்ளினார். இயேசு பெருமான், மணமற்ற வாழ்க்கையை நடத்தினார். சாக்ரட்டீஸ், மணவாழ்க்கையில் பற்றற்று இருநதாா. அரிய அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருநத நியூட்டனை அவருடைய மண நாளன்று நினைவுபடுததி அழைததது வரவேண்டி யிருநதது. கடவுளைககாணும துறையில மட்டுமல்ல, அறிவியல், இலககியம முதலிய பல துறைகளிலும அரிய பெரிய உண்மைகளைக் காண முயலவோர் கட்டுத்தளைகளை விருமபுவதில்லை. இதனாலதான் உலகில் புதிய கண்டு பிடிப்புகளுக்கும (Discoveries) படைபபு களுக்கும் (Inventions) காரணமாயிருபபவாகள ஆண்களே. உலகில் சிறநத மதங்களைத தோற்றுவித்தவாகளும தத்துவ ஞானிகளும ஆண்களாயிருப்பதும் இது காரணமாகவே.

கொடி, மரத்தைத் தழுவிச்சென்று மேலேறி இலைப் பரப்பை விரிததுக் கதிரவன் ஒளியைப் பெறுகின்றது. அது போன்று பெண்ணும், 'கொழுநனை'க் கொழுகொம்பாகக் கொண்டு எல்லாங் கடந்ததை உணாகின்றாள் 'கொழுநன்,' என்ற சொல்லிற்குப் பொருள், பற்று என்ற விரிநத பொதுப் பொருள் கொளளவேண்டும. கொழுகொம்பாக உள்ள எல்லாப் பறறுகளையும் அது குறிக்கும். தொழுது எழுவது தழுவி மேலேறுவதைக் குறிக்கும். கதிரவன் ஒளியைக் கொடி காண்பதுபோலப் பெண்ணும் எல்லாங் கடந்த பேரொளியைப் பற்றினைப் பற்றுக்கோடாகக் கொண்டேறிக் காண்கிறாள் என்பதே வள்ளுவர் கருத்து. ஆணை மரமாகவும் பெணணை அதைத் தழுவியேறும் கொடியாகவும் கூறுவது பல மொழி இலக்கிய மரபு. மரங்கள், கதிரவன் ஒளியைத தங்கு தடை யின்றிப் பெறுகின்றன. ஆனால், கொடிகள் மரங்களையே கொழு கொமபாகக்கொண்டு தழுவியேறிப் பெறுகின்றன.

'பெய்யெனப் பெய்யும் மழை,' என்றது அரியதை எளிமை யாகச் செய்யும் வலிமை அவாகளுக்குக் கைகூடும் என்பதை வலியுறுததிக் கூறலேயாகும. உலகில் மிக அரிய பெரிய செயல் மழையைப் பெய்விப்பது அததகைய அரிய செயல்களும்

கைகூடும் கடந்ததைக் கண்ட மகளிர்க்கு என்பதே வள்ளுவர் கருத்து. அம மகளிர் கடவுளை நேராக அறிவால் காண்ப தில்லை. பற்றால் பற்றுகின்றனர். இஃதே இக்குறட் கருத்து.

(௨) "பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில பிணந்தழீஇ யற்று." (திருக்குறள் ௯௧௩)

இக் குறளைப்பற்றிய பல ஆசிரியர்கள் கொண்ட கருத்து வேறுபாடுகளைச் செல்வி, சிலம்பு ௨௬, பரல் ௬-ல் 'பொருட் பெண்டிர்,' என்ற தலைப்பில் ஒருவர் எழுதியிருந்தார் கூலிக்குப் பிணமெடுத்தல் என்ற வழக்கத்தையே, 'ஏதில பிணந் தழீஇ யற்று,' என்ற சொற்றொடர் கூறுகின்றதென்று சிலர் கருது கின்றனர். கூலிக்காகப் பிணத்தைத் தழுவி அழும் வழக்கம் தமிழ்நாட்டில் இருந்தது. மற்றும், 'கூலிக்கு மாரடிக்கும்,' தொழிலையே சிறப்புத் தொழிலாகக்கொண்டு சிலர் இருந்திருக் கின்றனர். 'கூலிக்கு மாரடித்தல்,' என்ற பழமொழி வழக்கும் இதையே வற்புறுத்தும். ஆனால் வள்ளுவர் காலத்தில் கூலிக் காகப் பிணத்தைத் தழுவி அழும் வழக்கம் இருந்தது என்பது ஐயத்திற்கிடமானது.

மாதவையர், மலையாள நாட்டில் நம்பூதிரிகளிடையே வழங்கி வந்த 'கனிகழிவு' வழக்கமே இதிற் கூறப்பட்டது என்பர். அதையே 'பொருட் பெண்டிர்'க் கட்டுரையாசிரியர் பொருத்த முடையது என்கிறார். ஆனால், வள்ளுவர் வாழ்ந்த அக்காலத் தில் சேரநாட்டில் நம்பூதிரிகள் இருந்தார்கள் என்பதற்கு யாதொரு சான்றும் இல்லை. சேரநாடு கேரளநாடு ஆகவில்லை. மற்றும் யாதோ ஒரு சிறிய இடத்தில், ஒரு சிறு இனத்தாரால் போற்றப்பட்ட வழக்கத்தை வள்ளுவர் கூறினார் என்பது பொருத்தமன்று. மேலாகப் பார்த்தால் இது சாலவும் பொருத்த மாகத் தோன்றலாம் ஆனால் காலம், இடம், இனம் இவைகளை வைத்துப் பார்க்கும்போது பொருத்தமில்லை இக்காலத்தில், ஒரு சில ஆடவர், மருத்துவசாலையில் கிடந்த பெண் பிணங்களைத் தழுவிக் கூடினர் என்பதற்காக, சிறைச்சாலையில் தள்ளப்பட்ட னர் முறையற்ற வழியில் இன்பங்காணும், சிலர், ஆண்களும் ஆண்களும் ஒன்றுகூடி இன்பங் காண்கின்றனர். இதுபோன்ற முறைதவறிய ஒழுக்கங்களில் ஒன்று, இறந்த பெண்ணைப் புணர்வது. இது, வெளிநாட்டில் சிலரிடையே காணப்படுகின்றது. இந் நிகழ்ச்சியை வைத்துக்கொண்டு வள்ளுவர் இம்முறையில் தகாத தன்மையில் பெண்பிணத்தைப் புணரும் கொடிய வழக்கத்தையே கூறினார் என்று சொல்வது தற்காலத்திற்கு மிக மிகப் பொருத்தமாகத் தோன்றலாம். ஆனால், இக் கொடிய பழக்கம், அக்காலத்தில் இருந்ததென்பதற்குச் சான்றேது?

ஆதலின் காலம், சூழ்நிலை ஆகியவைகளை மறந்துவிட்டுப் பொருள் கூற முற்படலாமா ?

முக்காலத்திற்கும் பொருத்தமான, காலம், சூழ்நிலை கடந்த எளியதான, பிற ஆசிரியர்களும் ஒப்புக்கொள்ளக்கூடிய பொருள் என்னவென்று பார்க்கலாம். பொதுமகளிர், பிணம் போன்றவர். ஏனெனில் அவர்கள் உணர்ச்சி, உள்ளன்பு ஆகிய இன்றியமையாத பண்புகளை மறந்து வெறும் உடலையே ஆடவர்க்கு அளிப்பவர். உண்மைக் கூட்டத்திற்கு இருக்கவேண்டிய அன்பு, அவர்கள்மாட்டுச் செத்துப் போய்விட்டது. அன்பகத்தில்லாக் கூட்டை விலைக்குக் கொடுப்பவர்; என்புதோல் போர்த்த உடம்பைத் தருகின்றாரே ஒழிய, 'உறுதோறும் உயிர்தளிர்ப்பத் தீண்டும் தோளை'க் கொடுப்பவரல்லர். ஆதலின், அவர்கள் உயிர் இருந்தும் பிணம். உண்மைக்கலவி உடற்கின்பத்துடன் உயிர்க்கின்பமும் தரவேண்டும். விலைமகளிரின் பொய்ம்மை முயக்கம், உடற்கின்பத்தோடு நின்று விடுதலால் அது வெறும் பிணத்தைத் தழுவியது போன்றது. உயிர்க்கின்பம் தராத அவர்களைப் பிணம் என்று வள்ளுவர் கருதியே அயலவைப் (பெண்) பிணத்தைப்புணர்ந்தது போன்றது என்கிறார். பொருட் பெண்டிர் முயக்கம் உண்மை முயக்கமன்று. ஏனெனில் அது உயிர்க்கின்பந் தருவதில்லை. விலைமதிக்க இயலா உயிர்க்கின்பத்தைத் தராது உடலைப் பொருளுக்குத் தருகின்றனர் உள்ளஞ் செத்த உடலைத் தருவதால் அதைத் தழுவுவது பிணத்தைத் தழுவுவது போன்றது. அஃதாவது பொருட் பெண்டிர் முயக்கம் பிணத்தைச் சேர்ந்தது போன்றது என்கிறார் வள்ளுவர்.

ஆங்கில அறிஞர் ஆல்டுவெஸ் அக்ஸ்லி (Aldous Huxly) 'காலத்திற்கு ஒரு முடிவு வேண்டும்' (Time should have a stop) என்ற கருத்துக்கள் நிரம்பிய கதை எழுதியுள்ளார். அதில் ஒரு இளைஞன், கலவியின்பம் என்பது என்ன என்று அறிந்துகொள்ள முதல்தடவையாக ஒரு பெண்ணோடு கூடுகின்றான். அவள் ஒரு விலைமகள். கூடி வெளியே வருகின்றான். கூடி எழுந்து வெளியே வந்தவன் 'பிணத்தைக் கூடியதுபோன்ற ஒரு வெறுப்புணர்ச்சியோடு வெளியேறினன்' என்று, ஆசிரியர் கூறுவது கவனிக்கத்தக்கது. மனச்சான்று பெற்ற ஒரு ஆடவன் ஒரு விலைமகளைத் தழுவநேரிடின் பிணத்தைத் தழுவியது போன்ற உணர்வைப் பெறுவான், அவன் நுண்ணுணர்வுடையனாக இருப்பானேயாகில். இதையே வள்ளுவர் கூறுகின்றார். இதை விட்டுவிட்டுக் காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஒத்துவராத கருத்துக்களைக் குறளுக்குக் கூறுவது பொருத்தமின்று.

# கலைச்சொல்லாக்கம் வேண்டாவா?

[வித்துவான், திரு வி. பொ. பழனிவேலன்]

தமிழன்பர்களே! இரண்டாண்டுகட்குமுன் தமிழ் எழுத்துச் சீர்திருத்தக் குழுவினர் வகுத்த திருத்தங்களை அரசினர் ஒப்புக்கொண்டு அவ்வாறே இனி எல்லா அரசியல் அலுவலகச் செயல்களிலும், நூல் வெளியீடுகளிலும் பயன்படுத்தலாம் எனக் கூறிவிட்டனர் எனத் தெரிகிறது. இஃது ஒருவாறு ஒப்பத்தக்கதே யாயினும் இன்னும் பல தமிழ்ப் பேரறிஞர்களைக் கலந்து ஆய்ந்து அறிவித்திருந்தால் நன்றாயிருந்திருக்கும். எழுத்துக்களின் எண்ணிக்கையை இன்னும் குறைக்க வழியேற்பட்டிருக்கும். தமிழ் எழுத்துக்களின் வரி வடிவங்கள் தொன்று தொட்டுப் பெற்றுள்ள மாற்றங்கள் தமிழறிஞர் ஒவ்வொருவரும் நன்கறிந்ததே.

தமிழ்ப் பெருமக்கள் இவ் எழுத்துச் சீர்திருத்தம் செய்ததோடமையாது தமிழில் வந்து கலந்து வழங்கிவரும் பிறமொழிச்சொற்களுக்கு நேரான செந்தமிழ்ச்சொற்களை ஆராய்ந்தறிந்து வெளியிட்டால் தமிழின் தூய்மை கெடாமலிருப்பதற்கு வழியாகும். தமிழ் தனித்து இயங்கக்கூடும் என்பதை யாவரும் அறிய வாய்ப்பு ஏற்படும்.

அறிவியல்நூல், வானநூல், உளநூல் ஆகியவற்றில் பயன்படும் ஆங்கிலச்சொற்களுக்கும், வடமொழிச்சொற்களுக்கும் பொருந்தும் இன்றமிழ்ச் சொற்கள் ஆக்கப்பட்டுவிட்டால் நூல் எழுதுவோர், மொழிபெயர்ப்போர் அவற்றைப் பயன்படுத்தலாம். பயிலுவோர்க்கும் இடர்ப்பாடின்று, மொழியும் வளம் பெறும். "தமிழில் சமயச் சார்பான கருத்துக்களைத் தெரிவிக்கச் சொற்கள் உளவே யன்றி, அறிவியல் கருத்துக்களுக்கு ஏற்ற சொற்கள் இல்லை" என்பார் கூற்றுப் பொய்யாகும். தமிழ் மொழியும் ஓங்கும். குறையும் நீங்கும். பல ஆங்கிலச் சொற்களையும், வடமொழிச்சொற்களையும் மக்கள் பேச்சுவழக்கில் மேற்கொண்டுள்ளனர். சிலர் அச்சொற்களைத் தமிழ்எழுத்துக்களால் எழுதுகின்றனர். இங்ஙனம் நிகழ்ந்தால் நாளடைவில் ஆங்கிலமும் தமிழும் கலந்த ஒரு தனிநடையும், அதன் பின் ஒரு தனிமொழியும் தோன்றலாம் என்பது மொழியியலறிஞர் அறிந்ததே.

ஆகவே, தமிழ், ஆங்கிலம், வடமொழி இன்னும் ஏனைய மொழி வல்லுநர்களும் கொண்ட "கலைச்சொல்லாக்கக் குழு" ஒன்று அமைத்துத் தமிழை அணி செய்வது சாலச் சிறந்த பணியாகும் என்பது எனது தாழ்மையான எண்ணம். தமிழ் நலங்கோரும் யாவரும் சிந்திப்பார்களாக.

ஏனெனில், பல ஆங்கிலச்சொற்களுக்கு ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கருத்துக்கேற்பத் தமிழில் பொருள் கொள்கின்றனர். எதனை மேற்கொள்வதென்றும், எது சரியான சொல்லென்றும் பலர் அறிய இயலவில்லை. காட்டாக 'Train' என்ற ஆங்கிலச் சொற்கு ஒருவர் 'தொடர் வண்டி' யென்றும், இன்னொருவர் 'புகைவண்டி' யென்றும் எழுதுகின்றார்கள். இவற்றில் எதனைக் கொள்வது? எதனைத் தள்ளுவது? என்று ஐயம் எழுகின்றது. பலர்கருத்து திகைப்புண்டாகிறது. இதே போன்று பல சொற்களுக்குப் பலவிதமாகப் பொருள் கொண்டு எழுதித் தடுமாறவேண்டியுளது. வடமொழிச் சொற்களுக்கும் ஒரு சொல்லுக்குப் பலவகையில் தமிழில் பொருள் எழுதுகின்றனர். 'பிரதிநிதி' என்ற வடசொல்லுக்கு 'மாற்றாள்' எனச் சிலரும், 'பதிலி' எனப் பலரும் மாறுபட்டமாக எழுதுகின்றனர். எனவே அவரவர் நினைந்தாங்குப் பொருள்கொண்டு எழுதிக்கொண்டே வரின் நாளடைவில் மொழிவளர்ச்சி தடைப்படும். சொற்பொருள் குன்றும். மொழியின் தூயதன்மை சீர்கேடுறும்.

மேலும், பல பிறநாட்டுப் பொருள்கள் நம் நாட்டுக்கு வாணிகத்தின்பொருட்டு வருங்கால் அவற்றின் பிறமொழிப் பெயர்களும் உடன்வருகின்றன. பொருள் தெரியாத அச்சொற்களை அம்மொழி ஒலியோடே வழங்குகின்றோம்.

காபி (Coffee), டீ (Tea), ரோசா (Rose) முதலியன அவற்றுட் சில. கலைச்சொல்லாக்கக் குழுவினர், இவற்றிற்குத் தக்க சொற்களை உண்டாக்கலாம்.

ஆங்கிலேயர், முருங்கைக்காயை 'Drum Stick' என்றும், வெண்டைக்காயை 'Lady's Finger' என்றும் தங்கள் மொழியில் ஆக்கிக்கொண்டுள்ளார்களன்றோ? ஆதலின், தமிழ்ப் பேரறிஞர்களும், பன்மொழிப் புலவர்களும் கொண்ட ஒரு கலைச்சொல்லாக்கக் குழு அமைத்து மேற்கூறிய வகைகளில் திருத்தங்கள் செய்யின், தமிழ்மொழி தன் தூய்மை கெடாது; பொருட்செறிவு குன்றாது; நாடோறும் மொழிவளம் பெறுதற்கிடனுண்டாம். தமிழில் போதிய சொற்கள் இல்லையென்போர் கூற்று இல்லையாகும்.

இத்தமிழ்ப் பணியினைச் சென்னைமாநில அரசியலார் மேற்கொள்ளின் மிக்க நலமாகும். இல்லையேல் தமிழ்வளர்ச்சி விழையும் தமிழர் ஒருங்குகூடி நன்கு சிந்தித்து ஆக்க அலுவலில் ஈடுபடுவார்களாக.

வாழிய செந்தமிழ்!

# மறைவுற்ற தமிழ்நூல்கள்

[மயிலை திரு. சீனி வேங்கடசாமி.]

(சிலம்பு, உஅ, பரல் அ, ௩அ௩-ஆம பககத தொடர்ச்சி)

## 13. பஞ்ச பாரதீயம்

இப்பெயர் உடையநூலை அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் குறிப்பிடுகிறார். இது இசைததமிழ்நூல். நாரதர் என்பவா இயறறியது அடியாாககு நல்லாா காலததிலேயே இந்நூல் மறைந்துவிட்ட தெனறு தெரிகிறது சிலப்பதிகார உரைபபாயிரததில் அடியாாககு நலலாா இநநூலைப்பற்றி இவ்வாறு எழுதுகிறாா

"இனி, இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும பிறவும் தேவவிருடி நாரதன செய்த பஞசபாரதீயம முதலாவுளள தொன்னூல்களு மிறநதன"

சிலபபதிகாரம, வேனிற காதையில,

"செமபகை யார்ப்பே கூட மதிரவே
வெமபகை நீககும் விரகுளி யறிநது"

என்னும் அடிகளுக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார், அவ்வுரையில் இநநூலிலிருந்து ஒருசெய்யுளை மேறகோள் காட்டுகிறா: அச் செயயுள இது:

"இதனை,

இன்னிசை வழிய தன்றி யிசைத்தல்செம் பகைய தாகுஞ்
சொன்னமாத திரையி னேங்க விசைததிடுஞ் சுருதி யாப்பே
மன்னிய விசைவ ராதுமழுங்குதல் கூட மாகும்
நன்னுதால் சிதற வுநத லதிரவென நாட்டி னரே."

என்பதனாற் கொள்க. இது பஞசபாரதீயம."

இநநூலைப்பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை,

## 14. பெருநாரை. 15. பெருங்குருகு

இநத இரண்டு நூல்களும் இசைத்தமிழ் நூல்கள். இந்நூல்களை அடியாாக்கு நலலாா, சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் குறிப்பிடுகிறாா. அவர் எழுதுவது இது:

"இனி, இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை, பெருங்குருகும் பிறவும, தேவவிருடி நாரதன் செய்த பஞ்சபாரதீய முதலாவுள்ள தொன்னூல்களு மிறந்தன."

இறையனார் அகப்பொருள் பாயிர உரையில், தலைச்சங்கத்தைப் பற்றிக் கூறுகிற இடத்தில், "அவர்களாற் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையுமென இத்தொடக்கத்தன" என்று உரையாசிரியர் கூறுகிறார்.

இறையனார் அகப்பொருளுரையாசிரியர் கூறுகிற முதுநாரை, முதுகுருகு என்னும் நூல்களும், அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் கூறுகிற பெருநாரை பெருங்குருகு என்னும் நூல்களும் ஒரே நூல்கள் என்று தோன்றுகின்றன. அதாவது பெருநாரைக்கு முதுநாரை என்னும் பெயரும், பெருங்குருகுக்கு முதுகுருகு என்னும் பெயரும் வழங்கின என்று தோன்றுகிறது.

முதற்சங்க காலத்தில் இருந்த இந்த இரண்டு இசைத்தமிழ் நூல்களைப் பற்றிய வேறு செய்திகள் தெரியவில்லை.

## 16. இசை நுணுக்கம்

இப்பெயருடைய இசைநூலைப்பற்றி அடியார்க்கு நல்லாரும் இறையனாரகப்பொருள் உரையாசிரியரும் குறிப்பிடுகிறார்கள். "அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் மாபுராணமும் இசைநுணுக்கமும் பூதபுராணமுமென இவையென்ப" என்று இறையனாரகப் பொருளுரை கூறுகிறது.

சிலப்பதிகார உரைப்பாயிரத்தில் இந்நூலைப் பற்றி அடியார்க்கு நல்லார் எழுதுவது இது :—

"இனித் தேவவிருடியாகிய குறுமுனிபாற் கேட்ட மாணாக்கர் பன்னிருவருட் சிகண்டி என்னும் அருந்தவ முனி, இடைச் சங்கத்து அநாகுலன் என்னும் தெய்வப் பாண்டியன் தேரேறி விசும்பு செல்வோன் திலோத்தமை என்னும் தெய்வமகளைக் கண்டு தேரிற் கூடினவிடத்துச் சனித்தானைத் தேவரும் முனிவரும் சரியாதிறகத் தோன்றினமையிற் சாரகுமாரனென அப்பெயர் பெற்ற குமாரன் இசையறிதற்குச் செய்த இசை நுணுக்கம்"

இதனால், இசைநுணுக்கம் என்னும் இந்த இசைத்தமிழ் நூலை இயற்றியவர் சிகண்டி முனிவர் என்பதும், இந்நூல் சாரகுமாரன் (இவனுக்குச் சயந்த குமாரன் என்றும் வேறு பெயர் உண்டு.) என்னும் பாண்டிய குமாரன் இசையறியும் பொருட்டு இயற்றப்பட்டதென்பதும் தெரிகின்றன.

இந்நூல் வெண்பா யாப்பினால் செய்யப்பட்டது. இந்நூலிலிருந்து நான்கு செய்யுள்களை அடியார்க்கு நல்லார் தமது உரை

யில் மேற்கோள் காட்டுகிறார். சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில், "யாழுங் குழலும் சீரும் மிடறும்" என்னும் வரியில், மிடறு என்பதற்கு உரை கூறுமிடத்தில் அடியார்க்கு நல்லார் இந்நூற் செய்யுள்களை மேற்கோள் காட்டுகிறார். அவர் கூறுவது:

"என்னை?

இடைபிங் கலையிரண்டு மேறும் பிராணன
புடைநின் றபானன் மலம் போக்கும்—நடையின்றி
யுண்டனகீ ழாககு முதானன் சமானனெங்கும
கொணடறியு மாறிரதக கூறு

எனவும்,

கூர்ம னிமைப்புவிழி கோணுகன் விக்கலாம்
போவில் வியானன் பெரிதியககும்—போர்மலியுங்
கோபங கிருதரனுங கோப்பி னுடம்பெரிப்புத்
தேவதத்த னுகுமெனறு தேர்.

எனவும்,

ஒழிநத தனஞசயனபே ரோதி லுயிர்போயக்
கழிநதாலும் பின்னுடலைக கட்டி—யழிந்தழிய
முந்நா ளுதிப்பிதது முனனியவான மாவின்றிப்
பினனு வெடிததுவிடும போநது.

எனவும் இசைநுணுக்கமுடைய சிகண்டியாரும் கூறினாராகலின்."

சிலப்பதிகாரம கடலாடு காதையில், "மாயோன் பாணியும் வருணபபூதர், நால்வகைப பாணியும்" என்னும் அடிகளுக்கு உரை எழுதுமபோது அடியார்க்கு நல்லார் இசைநுணுக்கத்திலிருந்து மேற்கோள் காட்டுகிறார்; அவர் எழுதுவது இது:

"இனி, இசைத்தமிழில் வருங்கால், முகநிலை கொச்சகம் முரி என்ப ஒருசாராசிரியர். அன்றி இசைப்பா, இசையளவுபா வென்னும் இருபகுதியுள் இஃது இசைப்பாவின் பகுதி என்ப. அது, பத்துவகைபபடும்: செந்துறை, வெண்டுறை, பெருந் தேவபாணி, சிறுதேவபாணி, முத்தகம், பெருவண்ணம், ஆற்று வரி, கானல்வரி, விரிமுரண், தலைபோகு மண்டிலமெனை.

என்னை?

செந்துறை வெண்டுறை தேவபா ணிய்யிரண்டும்
வந்தன முத்தகமே வண்ணமே—கந்தருவத
தாற்றுவரி கானல் வரிமுரண் மண்டிலமாத்
தோற்று மிசையிசைப்பாச சுட்டு.

என்றார் இசைநுணுக்க முடைய சிகண்டியாரென்க." இந்நூலைப் பற்றிய ஏனைய செய்திகள் தெரியவில்லை.

## 17. பஞ்ச மரபு

இதுவும் ஓர் இசைத்தமிழ் நூல். இதனை இயற்றியவர் அறிவனார் என்பவர். இந்நூலை, அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் குறிப்பிடுகிறார். "அறிவனார் செய்த பஞ்சமரபு" என்று உரைச் சிறப்புப் பாயிரத்தில் குறிப்பிடுகிறார். மேலும், சிலப்பதிகாரம், கடலாடு காதையில் 35-ஆவது அடியில்வரும் "மாயோன்பாணி" என்பதற்கு உரை எழுதுகையில் இந்நூற் செய்யுள் ஒன்றை மேற்கோள் காட்டுகிறார். அவர் எழுதுவது:

"இன்னும் சுத்தம் சாளகம் தமிழென்னும் சாதியோசைகள் மூன்றினுடனும் கிரியைகள் (தாளங்கள்) உடனும் பொருந்தும் இசைப்பாக்கள் ஒன்பது வகை என்ப. அவை:—சிந்து, திரிபதை, சவலை, சமபாத விருத்தம், செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறுதேவபாணி, வண்ணமென விவை,

என்னை ?

'செப்பரிய சிந்து திரிபதை சீரசவலை
தப்பொன்று மில்லாச சமபாத—மெய்ப்படியுஞ்
செந்துறை வெண்டுறை தேவபாணி வண்ணமென்ப
பைந்தொடியா யின்னிசையின் பா.'

என்றார் பஞ்சமரபுடைய அறிவனா ரென்னு மாசிரியரென்க."

இந்நூலைப் பற்றிய வேறு செய்திகள் தெரியவில்லை.

## 18. இசைத்தமிழ்ச் செய்யுட்டுறைக் கோவை

இப் பெயருள்ள நூல் ஒன்று இருந்ததென்பது, யாப்பருங்கலக் காரிகை உரைப் பாயிரத்தினாலே தெரிகிறது. அவ்வுரையாசிரியர் கூறுவது வருமாறு:—

"அற்றேல் இந்நூல் என்ன பெயர்த்தோ எனின்,.......... இசைத் தமிழச் செய்யுட்டுறைக் கோவையே போலவும் உருபாவதாரத்திற்கு நீதகச் சுலோகமே போலவும் முதல் நினைப்பு உணர்த்திய இலக்கியத்ததாய்ச்...............செய்யப்பட்டமையான் யாப்பருங்கலக் காரிகை என்னும் பெயர்த்து."

இதனால் அறியப்படுவது என்னவென்றால், இசைத்தமிழ் நூல் ஒன்று இருந்ததென்றும் அந்நூலுக்குச் சார்புநூலாகச் செய்யுட்டுறைக் கோவை என்னும் இந்நூல் செய்யப்பட்ட

தென்றும், இந்நூலில் முதனூலின் பாட்டுக்களை உணர்த்தும் செய்யுள்களும் இருந்தன என்றும் தெரிகின்றன.

இந்நூலாசிரியர் முதலிய செய்திகள் தெரியவில்லை.

## 19. பதினறு படலம்

இதுவும் ஒரு இசைத்தமிழ நூல். இந்நூல் பல ஒத்துகளாகப் பிரிக்கப்பட்டிருநதது. இந்நூல ஆசிரியர் யார் என்பது தெரியவிலலை. சிலப்பதிகாரததின் குறிப்புரை யாசிரியராகிய பழைய உரையாசிரியர் இந்நூலிலிருந்து ஒரு சூத்திரத்தை மேற்கோள் காட்டுகிறார். கானல் வரியில்,

'வார்தல் வடிததல் உந்தல் உறழ்தல்
சீருட னுருட்டல் தெருட்டல் அள்ளல்
ஏருடைப் பட்டடையென இசையோர வகுத்த
எட்டு வகையின் இசைககரணத்து."

என்னும் அடிகளுக்குக் குறிபபுரை எழுதிய பழைய உரையாசிரியர், தெருட்டல் என்பதற்குப் பதினறுபடலம் என்னும் இந்நூலிலிருநது கீழ்க்கண்ட சூததிரததை மேற்கோள் காட்டுகிறார் :—

"தெருட்ட லென்றது செப்புங் காலை
யுருட்டி வருவ தொன்றே மற்ற
வொன்றன் பாட்டு மடையொன்ற நோககின்
வல்லோ ராய்ந்த நூலே யாயினும்
வல்லோர பயிற்றுங் கட்டுரை யாயினும்
பாட்டொழிந் துலகினி லொழிந்த செயகையும்
வேட்டது கொண்டு விதியுற நாடி"

எனவரும் இவை, இசைததமிழ்ப் பதினறுபடலத்துள் கரணவோத்துட் காண்க"

இந்நூல் சூத்திரயாப்பினுல் அமைநத இசைத்தமிழ்நூல் என்பது தெரிகிறது. இதைபபற்றிய வேறு செய்திகள் தெரியவில்லை

## 20. குலோத்துங்கன் இசைநூல்

குலோத்துங்கச் சோழன் சோழ அரசர்களில் பேர்பெற்றவன். இவனுககு விசையதரன், சயங்கொண்டான் என்னும் சிறப்புப் பெயர்களும் உண்டு. கலிங்கபபோரை வென்றவன் இவனே. அதனுல், கலிங்கத்துப்பரணி என்னும் நூலைச் சயங்கொண்டார் எனனும் புலவரால பாடப் பெற்றவன். இவன்

இசைக்கலையில் வல்லவன் என்றும் இசைத்தமிழ்நூல் ஒன்றை இயற்றினன் என்றும் கலிங்கத்துப்பரணி கூறுகிறது.

வாழி சோழகுல சேகரன் வகுத்த விசையின்
மதுர வாரியென லாகுமிசை மாத ரிதனல்
எழு பாருலகொ டேழிசை வளாகக வுரியான்
யானை மீதுபிரி யாதுட னிருந்து வரவே.

(கலிங்கத்துப் பரணி அவதாரம். 54-ஆம தாழிசை)

தாள முஞ்செல வும்பிழை யாவகை
தானவ குத்தன தனனெதிர பாடியே
காள முகளி றும்பெறும பாணாதங
கலவி யிற்பிழை கண்டனன கேட்கவே.

(காளிக்குக் கூளிகூறியது 13-ஆம் தாழிசை)

இதனல், இவன் இசைக்கலையை நன்கறிநதவன் என்பதும், இசைக்கலையில் வலலவரான பாணர்களின் இசையிலும இவன் பிழைகண்டவன் என்பதும, இசைநூல் ஒன்றை இவன் வகுத்தான் (இயற்றினன்) என்பதும, இவன் வகுதத இசை நூல் முறைப்படி இசைபாடி இவனிடம பாணாகள் பரிசு பெற்றார்கள என்பதும் அறியபபடுகின்றன.

இவ்வரசன் இயற்றிய இசைநூலின் பெயர் தெரியவில்லை. அந்நூலைப் பற்றிய வேறு செய்திகளும தெரியவில்லை.

## 21. மாாகண்டேயனா காஞ்சி

குணசாகரர் என்னும் உரையாசிரியர் யாப்பருங்கலக் காரிகை உரையில் இந்நூலைக் குறிபபிடுகிறா. குறிபபிடுவதோடு, இநநூற் செய்யுள் ஒன்றினை மேற்கோள் காட்டுகிறர். குணசாகரர் மேற்கோள் காட்டுகிற இநதச செய்யுளையே இளம்பூரண அடிகளும் தமது தொல்காபபிய உரையில் (பொருள்: செய்யுளியல 230-ஆம் சூததிர உரை.) மேற்கோள் காட்டுகிறர். ஆனல், அவர், இச் செய்யுள எநநூலைச சோநதது என்பதைக் குறிப்பிடவில்லை. குணசாகரர் கூறியதிலிருந்து இச் செய்யுள் மார்க்கண்டேயனர் காஞ்சியில் உளளது என்பது தெரிகிறது. அச் செய்யுள இது.

"பாயிரும் பரப்பகம் புதையப் பாம்பின்
ஆயிர மணிவிளக் கழலுஞ் சேக்கைத்
துளிதரு வெள்ளந் துயில்புடை பெயர்க்கும்
ஒளியோன் காஞ்சி யெளிதெனக் கூறின்

இம்மை யில்லை மறுமை யில்லை
நன்மை யில்லைத் தீமை யில்லைச்
செய்வோ ரில்லைச செய்பொரு ளில்லை
யறிவோர் யாரஃ திறுவழி யிறுகென"

முதுமொழிக் காஞ்சி, இரும்பல் காஞ்சி என்னும் நூல்களைப் போனறு இநத மாரக்கண்டேயனார் காஞ்சியும் அறம பொருள் இன்பம் வீடு என்னும நாற்பொருளைக் கூறுகிற நூல் என்று கருதபபடுகிறது.

இந்நூலைப் பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை.

## 22. இரும்பல் காஞ்சி

இப் பெயருள்ள நூல் ஒன்று இருந்தது என்பதைத் தக்க யாகப்பரணி உரையினாலும, புறத்திரட்டினாலும் அறிகிறோம். தக்கயாகப்பரணி உரையாசிரியர் இநநூலிலிருநது இரண்டு செய்யுள்களை மேற்கோள் காட்டுகிறார். அவை :

"எயகணை விழுநதுளை யன்றே செவித்துளை
மையறு கேளவி கேளா தோர்க்கே."

(தக்கயாகப்பரணி. கோயிலைப் பாடியது. 53-ஆம் தாழிசை உரைமேற்கோள் )

"பருதிக கருவின் முட்டைக கதிர்விடும்
பெருங்குறை வாங்கி வலஙகையிற்
பூமுத விருநத நான்முகத தனிசசுடர்
வேதம் பாடிய மேதகப் படைத்தன
எண்பெரு வேழம"

(தக்கயாகப் பரணி. காளிக்குக் கூளி கூறியது 32-ஆம் தாழிசை உரைமேற் கோள்.)

இரும்பல் காஞ்சியிலிருந்து மூன்று செய்யுள்களைப் புறத் திரட்டில் தொகுததிருக்கிறாகள். அச் செய்யுளகள் இவை:

[1] "நீல நெடுஙகொணமூ நெற்றி நிழனறிக
காலை யிருள்சீககுங காயகதிரபோல்—கோல
மணித்தோகை மேற்றோன்றி மாக்கடற்சூா வென்றோன்
அணிசசே வடியெம் அரண." (கடவுள் வாழத்து.)

"ஆர்கலி ஞாலத தறஙகாவ லாற்சிறந்த
பேரருளி னற்குப் பெறலருமை யாதரோ
வாாநிரைய மாமகர வெள்ளத்து நாப்பண்ணும்
போாமலைந்து வெல்லும் புகழ"

1. இசசெய்யுள் நளவெணபாவில் காணப்படுகின்றது.

"கருஙகலி முந்நீரின் மூழகாத முன்னம்
இருஙகடி மண்மகளை யேந்தினவே யாயிற்
பெரும்பெய ரேனத் தெயிறனைய வன்றே
சுரும்பறை தொணடையான் தோள்."

இந்நூலைப் பற்றிய ஏனைய செய்திகள் தெரியவில்லை.

## 23. முப்பேட்டுச் செய்யுள்

இப் பெயருள்ள நூலையும் இந்நூலிலிருந்து மூன்று செய்யுளையும் யாப்பருஙகல உரையாசிரியர் தமது உரையில் குறிப்பிடுகிறார். யாபபருங்கலச் செயயுளியல், 40-ஆம சூததிர உரையில் இவ் உரையாசிரியர் எழுதுவது இது :

"கல்வினைக் கதிரமணிக கவணபெயது கானவர்
கொல்லையிற் களிறேறி வெற்பே யாதே
கொல்லையுட் களிறேறி வெற்பனிவ வியனாட்டா
பல்புகழ வானவன் றாளே யாதே
பல்புகழ வானவன் றாளொடுசா மன்னாககோர்
நலல படாஅ பறையே யாதே."

எனவும்,

"ஈரித ழிணர்நீல மிடைதெரியா தரிததிடேஉம
ஆய்கதி ரழற்செஙநெ லரியே யாதே
ஆய்கதி ரழற்செஙநெ லகன்செறுவி லரிநதிடேஉங
காவிரி வளநாடன் கழலே யாதே
காவிரி வளநாடன் கழல்சோ மன்னாக்
காரர ணிற்ற லரிதே யாதே."

எனவும்,

"நிததிலங கழலாக நிரைதொடி மடநல்லார
எககாவா னிடுமண விணரே யாதே
எக்காவா னிடுமண விணாபுணர்ந் திசைந்தாடும்
கொற்கையார கோமானே கொடியே யாதே
கொற்கையார் கோமான் கொடிததிண்டோ மாறற்குச
செற்றர ணிற்ற லரிதே யாதே."

எனவும் இத்தொடக்கததன முப்பெட்டுச செய்யுளும் ஆறடியான் மிக்கனவேனும ஒருபுடை யொப்புமை நோககிக் கலிவிருத்தத்தின்பாற்படுத்து வழங்கப்படும்."

முப்பெட்டுச் செய்யுள் சேர, சோழ, பாண்டியர்மீது இயற்றப்பட்ட நூலெனத தோன்றுகிறது. இந்நூலைப்பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை

## 24. பிங்கல கேசி. 25. அஞ்சன கேசி. 26. காலகேசி. 27. தத்துவதரிசனம்.

இந்த நான்கு நூல்களை யாப்பருங்கல விருத்தியுரைகாரர் தமது உரையில் குறிப்பிடுகிறார். யாப்பருங்கலம் ஒழிபியலில் அவர் எழுதுவது வருமாறு :

"தருக்கமாவன: ஏகாந்தவாதமும் அநேகாந்தவாதமும் என்பன. அவை குண்டலம், நீலம், பிங்கலம், அஞ்சனம், தத்துவ தரிசனம், காலகேசி முதலிய செய்யுள்களுள்ளும், சாங்கிய முதலிய ஆறுதரிசனங்களுள்ளும் காண்க."

இதில் இவர் கூறுகிற குண்டலம் என்பது குண்டலகேசி என்னும் நூல். அது பௌத்தநூல். இந்நூலின் சில பாக்கள் மட்டும் கிடைத்துள்ளன (இந்நூலைப் பற்றிப் பின்னர் எழுதப்படும்) நீலம் என்பது நீலகேசி. இது இப்போது அச்சிடப்பட்டிருக்கிறது. பிங்கலம் என்பது பிங்கலகேசி. அஞ்சனம் என்பது அஞ்சனகேசி. இந்நூல்கள் இப்போது கிடைக்கவில்லை. அவ்வாறே தத்துவ தரிசனமும் காலகேசியும் கிடைக்கவில்லை. எனவே, இந்நூல்கள் இறந்துபட்டன போலும்.

இந்த நூல்கள் எல்லாம் பௌத்தம் அல்லது சைனம் என்னும் மதங்களைச் சார்ந்தவை.

யாப்பருங்கல உரையாசிரியர், பிங்கலகேசியைப் பற்றி மேலும் எழுதுகிறார். "பிங்கல கேசியின் முதற்பாட்டு இரண்டாமடி ஓரெழுத்து மிகுத்துப் புரிக்காகப் புணர்த்தார்." (ஒழிபியல் உரை.)

"தனி சீர் வண்ணமாமாறு சொன்ன இலக்கணமும் தனி சீர் வண்ணம் எனப்படும் உபசார வழக்கினால். குண்டல நீல பிங்கலகேசிகளது தோற்றமும் தொழிலும் சொன்ன விலக்கணச் செய்யுட்களும் பிரித்து வேறோருபசாரத்தினாற் குண்டலகேசி நீலகேசி பிங்கலகேசி என்னும் பெயர் பெற்றாற்போல எனக் கொள்க." (எழுத்தோத்து உரை.)

இந்த நூல்களைப் பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை.

## 28. குறுவேட்டுவச் செய்யுள். 29. லோகவிலாசனி. 30 பெருவளநல்லூர்ப் பாசண்டம்.

இந்த மூன்று நூல்களின் பெயரை யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் குறிப்பிடுகிறார். யாப்பருங்கலம் ஒழிபியலில் அவர் கூறுவது இது :

"இனிப் பாவினங்களுட் சமக்கிருதமும் வேற்றுப் பாடையும் விரவிவந்தால் அவற்றையு மலகிட்டுப பாச்சார்த்தி வழங்கப் படும. அவை, குறுவேட்டுவச் செய்யுளும், லோகவிலாசனியும், பெருவளநல்லூராப் பாசண்டமும் முதலாகவுடையன எனக் கொள்க."

இந்த நூல்களைப்பற்றி வேறு செய்திகள் தெரியவில்லை.

## 31. கலியாண கதை

யாப்பருங்கலம, செய்யுளியல் 21-ஆம் சூத்திர உரையில் உரையாசிரியர் கலியாண கதை என்னும நூலைக் குறிப்பிடு கிறார். "உதயணன் கதையும் கலியாண கதையும் என் என்னும் அசைச்சொல்லாலிற்ற நிலைமண்டிலம" என்று அவர் எழுது கிறார்.

இதனால் உதயணன்கதை(பெருங்கதை)யைப்போன்று கலியாண கதை என்னும ஒரு நூல் இருந்த தென்பதும அது நிலைமண்டில ஆசிரியப்பாவினால் இயற்றப்பட்ட நூல எனபதும் அப்பாக்களின இறுதிசொல என் என்னும அசைச்சொல்லைக் கொண்டு முடிந்தன என்பதும தெரிகின்றன.

இந்நூலைப பற்றி வேறு செய்திகள தெரியவில்லை.

(தொடரும்.)

---

## கல்வி

[நாஞ்சில், திரு. கா கணபதி]

புலமை நிரம்ப வேண்டும—எனில
பொறுமை முதலில வேண்டும—நன்னூல்
பலவும் முறையே கற்றுக—கலையில்
பழகும் உளளம வேணடும். (௧)

காலை எழுந்து கற்றல—உள்ளக
கனிவு வளர நலமாம—மோன
வேலை செயயும் பொழுதும—நூலில்
வேட்கை நிலைத்தல் வேண்டும. (௨)

ஆசான் சொல்லைக கேட்டு—அமைந்து
அடங்கிக் கற்றல் வேணடும்—வீணில
பேசா(து) இருததல வேணடும—நாவைப்
பேணி ஒழுகல வேணடும (௩)

அன்பு நிலைத்தல் வேண்டும—அதனில
அறிவு திளைததல வேணடும—பணபு
பொன்போ லொளிரதல வேண்டும—கல்வி
பொஙகிப் பொலிய வேண்டும்! (௪)

# தூதின் தூய்மை

[பண்டிதை, திருவாட்டி, எஸ். கிருஷ்ணவேணி அம்மையார்]

உலகில் மக்கள்புரியும் தொழில்கள் பலப்பல அவை அவரவர் கல்வி, அறிவு, நிலை, இயல்பு முதலியவற்றுள் ஒன்றையோ இரண்டையோ சார்ந்திருக்கும். அறிஞர் பெரும்பான்மையும் தொழிலில ஏற்றத்தாழ்வைக காணுதல் இல்லை அஃது எஃதாயினும, செமமையுறச் செய்யுங்கால், அதனுல் பல நலங்கள் ஏற்படும என்பது அவர்தம கருத்து. ஆதலின், ஒரு தொழிலை நாம செய்யததொடங்கும்போது, அதன் தன்மையையும் நம் வன்மையையும் ஊன்றி நோக்கி, அதை மேற்கொள்வதே தகுதியுடையதாகும. நாம ஒனறைப் பிறரிடம் ஒப்படைக்குங் காலததிலும, இம்முறையையே பின்பற்றுதல்வேண்டும். இங்கு,

[1]'இதனை யிதனு லிவன்முடிக்கும் என்றாய்ந்
ததனை யவன்கண் விடல்.'

என்னும குறட்பாவை நோக்குக.

இத்தகைய செயல்களுள 'தூது' என்பதும் ஒன்று. ஒருவருடைய சொற்களையோ கருததுககளையோ மறறொருவருக்குத் தெரிவிப்பதறகுத தூது என்றும், அச்செயலை மேற்கொள்பவருக்குத தூதுவா எனறும சொல்வர். இஃது அரசன் முதல ஆண்டி ஈறுகவும், பெரியவர்முதல் சிறியவர் ஈறுகவும் நிகழும செயலாகும. சான்றோர், ஒரு சிறுவன் தனக்கு வேண்டிய பொருளைப் பெறவோ, அன்றி அவனுக்குத் தெரியாத ஒன்றைத் தெரிவிக்கவோ தன வகுப்பு மாணவனிடம் தன் தமபியையேனும், பணியாளனையேனும் அனுப்புகிறுன். இதுவும் தூதில சேர்நததே. ஆயினும், தூதுவிடுபவர் நிலைக்கும், தூதின் பொருளுக்கும் ஏற்ப, தூதுவருடைய தன்மைகளும் வேறுபட்டிருககும்.

ஒரு தூதுவனுக்கு, அறிவுடைமை, நற்குடிப் பிறப்பு, சாதுரியம், அஞ்சாமை, தோற்றப் பொலிவு, நீதிநூற் பயிற்சி, ஒவவொன்றையும ஆழ ஆராய்நது சொல்லும் திறமை முதலிய இலக்கணங்கள் அமைநதிருததல்வேண்டும். அனறியும், பலவற்றையும் தொகுதது, காலம இடங்களுக்கேற்பத தான் சொல்ல வேண்டுவனவற்றை நன்கு ஆய்ந்து சொல்லும் இயல்புடையவனே தூதுவரில் முதன்மையுற்றவனுவான்.

---

1. திருக்குறள். ருகஎ.

இத்துணை உயரிய பண்புகள் பலவாய்ந்த தூதுவர் சிலர் அரசவைகளை அலங்கரிப்பது நம் பண்டைய நாட்டு வழக்கம். இவர்களால் மன்னர் பெரும்பேறுகளைப்பெற்று வாழ்வர். சில தூதுவருடைய வன்மைக் குறைவால் நாட்டிற்குத் தீமை விளையி னும விளையலாம். பொதுவாக ஒரு நாட்டின் ஆக்கததிற்கும் அழிவிற்கும, இருநாடுகளின் ஒற்றுமைக்கும் வேற்றுமைக்கும் இவர்களே காரணர் எனக் கூறினும் பொருந்தும். ஆதலின், தூதுவா எததுணை அறிவு ஆராய்ச்சிகளில் துறைபோயவரா யிருத்தல் வேண்டுமென்பது சொல்லாமலே அமையும. ஆத லினாற்றான், நூல்கள், தூதுவரின் இலக்கணங்களைப் பலவகை யாக வகுததும் விரித்தும் சொல்கின்றன.

இத்தூதுவர் பலதிறப்படுவரேயாயினும், இவர்கள் யாவரை யும்,

(௧) மன்னரின் கருத்துக்களை மனங்கொண்டு செல்பவர்.

(௨) காதலரின் அன்பைத் தாங்கிச செல்பவர்.

(௩) பரமான்மா சீவான்மாக்களின தொடர்பைப் பொருத்துபவர். ஆகிய இம் மூவகையுள் அடக்கலாம.

இவருள் முதலில் மன்னரின் தூதுவரைப்பற்றி நோக்கு வாம் :

உண்மைக்குக் கட்டுப்பட்டு உயிரை இழந்த தசரத சக்கர வர்த்தியின் புதல்வனுகிய இராமபிரான், குரக்குச் சேனைகளுடன் கடலைக் கடந்து இலங்கையை அணுகினன. அந்நாட்டின் பரப் பும், செழுமையும், செல்வப்பெருககும் அவனை வியப்பிலாழ்த் தின. "அந்தோ! தன் அறியாமையினுல, இராவணன் இத் தனைக்கும அழிவைத தேடிக்கொண்டனனே," என இரககங் கொண்டான். அவ்விரக்க மனம, உடனே அவனுேடு போர் தொடங்க இடநதந்திலது! ஆதலின், இறுதியாக, "நம எண்ணத்தை இராவணனுககு அறிவித்தற்பொருட்டு யாரை யேனும அவன்பால் தூது அனுப்புதல் நல்லது," எனத் தீர்மா னித்து, அங்கதனை அச்செயலுக்கு அரக்கனிடம் செல்லவிடுத் தான்.

இராமன் பணியைத் தலைமேற்கொண்டு சென்ற அங்கதன் கொடுந்தொழிலில ஆண்சிங்கத்தை யொத்த இராவணன்முன் தன் வீரம் விளங்க நின்ருன். இவனுடைய கெம்பீரப் போக் கிற்கு வியந்த இராவணன், இவனை நோக்கி, 'நீ யார்? நீ கருதி வந்த காரியம் யாது?' என வினவினுன்.

அங்கதன் : பண்டு ஓர் அரக்கனைத் தன் வாலில் பிணித்துக்கொண்டே மலைகளில் தாவித் திரிந்தவனும், மந்தரமலையால் கடலைக் கடந்து அமுதங் கொணர்ந்தவனுமான வாலியின் புதல்வன் யான்; இவ்வுலகிற்கும், சீதைக்கும், மற்றுள்ள தெய்வங்கட்கும், வேதத்திற்கும், நான்முகனுக்கும் தலைவனாகிய இராமபிரான் விடுத்த தூதுவன், அவர் பணித்ததை உனக்குத் தெரிவிக்க வந்துள்ளேன்: "உன் மாமன், மகன், தம்பிகளாகிய கரதூடணர் முதலியவர்களை நமனுலகத்திற்கு அனுப்பிய போதும், சூர்ப்பநகைக்கு அங்கக் குறைவை உண்டாக்கிய காலத்தும் போருக்குப் புறப்படாத கோழையாகிய நீ, வாழக் கருது வையேல், தேவியை விடுதல், அன்றிச் சுற்றத்தோடும் அழிய எண்ணுவையேல், செருக்களத்தெதிர்த்து ஆவியை விடுதல் ஆகிய இரண்டனுள் ஒன்றைச் செய்யுமாறு உன்னிடம் செப்பச் சொன்னார்," எனச் சொல்லி அஞ்சா ஆண்மையுடன் நின்றான்.

அவ்வமயம் சினங்கொண்ட இராவணனால் ஏவப்பட்ட நான்கு கொடிய அரக்கர்கள், அங்கதன்மேற் பாய்ந்தார்கள். அவன் அவர்களை நன்றாகப் புடைத்துத் தூரத்திவிட்டு, இராமரிடம் வந்து சேர்ந்தான். இவனுடைய அஞ்சாமையும் வீரமும் என்னே!. இவை போன்றனவே தூதுவருக்கு அணிகலன்களாகும். இன்னும் அங்கதன் இராவணனிடம் நடந்து கொண்ட பெருந்தகைமையும், அவனுக்குரைத்த அறிவுரைகளும் பாராட்டத்தக்கனவாகும். இவற்றைக் கம்பர் கவியில் காணலாம். அவைகட்கு இக்கட்டுரை இடந்தராது. ஆயினும், இங்கு இன்றியமையாது இயம்பவேண்டிய ஒரு செய்யுளை மட்டும் காட்டுவாம்.

[1] 'என்றிவை யியம்பி வாவென் றேவின னென்னை எண்ணி
ஒன்றுனக் குறுவ துன்னித் துணிந்துரை யுறுதி பார்க்கின்
துன்றிருங் குழலை விட்டுத் தொழுதுவாழ் சுற்றத் தோரும்
பொன்றுதி யாயி னென்றன் வாயிலிற் புறப்ப டென்றான்.'

[2] 'கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்,
தக்க தறிவதாந் தூது.'

தம் நாயகனை விட்டுப் பிரிந்து, கொடிய அரக்கரிடையில் இருந்து துன்பச் சூழலில் சுழன்றுகொண்டிருந்த சீதா பிராட்டியார், 'இனி உயிர் விடுதலே தகுதி' என உறுதி கொண்டாராய், அரக்கிகள் சூழ்ந்த உறைகத்தில் இருக்குஞ் சமயத்தில் அருகிலிருந்த குருக்கத்திப்புதரை யடைந்தார். அவ்வமயம் மரத்தின்மீது மறைந்திருந்த அனுமானுக்கு

1. கம்ப. உயுத்தகாண்டம்: ௩௭　　2. திருக்குறள்: ௬அ௬

அவர் கருத்துப் புலனாயிற்று. ஆயினும், அவரை மரணத்தினின்றும் காத்தல் எவ்வாறு?" என்பது தோன்றிற்றிலது. சிந்தித்தற்குச் சில விநாடிகளும் இடைவெளியில்லை. சிறிது தாழ்க்கினும், அவர் உயிர் துறப்பர். கீழிறங்கி அவரை மெலமெலனப் பற்றித் தடுக்கலாமென்னிலோ, அவ்வன்னையாரின் திருமேனியைத் தீண்டுதல் தகுதியுடையதன்று. இந்நிலையில் அனுமான் அடைந்த கலக்கம் சிறிதன்று. ஆயினும் அவ்வமயம் அவன் நுண்ணறிவிற்கேற்ப ஒரு நினைவு அவனுக்குதித்தது. இஃதே இவ்வமயத்திற்கு ஏற்றதெனை உறுதிகொண்டு, "தேவர்களுக்குத் தலைவனான இராமபிரான், உம்பால் விடுத்த தூதுவன் யான்" எனச் செப்பிக்கொண்டே, கோவையன்ன அதரத்தையும், மயில் போன்ற சாயலையும் உடைய பிராட்டியாரைத் தொழுது அவர் முன் நின்றான். அணையும் நிலையிலுள்ள விளக்கிற்கு ஒளியைக் கொடுக்கும் நெய் போன்று, ஆவியை அகற்றும் நிலையில் இருந்த பிராட்டியாருக்கு இராமபிரானுடைய திருநாமம் உயிரை ஈந்தது.

[1] 'கண்டனன் அனுமனும் கருத்து மெண்ணினான்
கொண்டனன் துணுக்கமமெய் தீண்டக் கூசுவான்
அண்டர்நா யகன்அருள் தூதன் யானெனாத்
தொண்டைவாய் மயிலினைத் தொழுது தோன்றினான்'

என்னும் கம்பர் வாக்கு இதைத் தெள்ளிதின் தெரிவிக்கின்றது.

இங்குத் தூது சென்ற அனுமானுடைய நுட்ப அறிவும், காலத்திற்கேற்ப நடந்துகொண்ட அவன் சாதுரியமும் விளங்குகின்றதல்லவா? கிள்ளையைப் போன்று, ஒருவர் செப்பியதை அங்ஙனமே மற்றொருவருக்கு ஒப்புவிப்பது மட்டும் தூதுவன் கடமையன்று. அவன் தூதுச் செயலிற்குத் தக்கவனாகான். முதலில் இயம்பியவாறு நல்லறிவும், தோற்றப்பொலிவும், தேர்ந்த கல்வியும் பெற்றிருப்பவனே தூதுபோதற்கு ஏற்றவனாவான் என்பது நூல்களின் துணிபு.

[2] 'அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.'

இவ்விலக்கணங்கள் வாய்ந்த அனுமான் இலங்கையில் செய்த அற்புதச் செயல்கள் பலவாகும். அவற்றை விரித்தற்கு இஃது இடமன்றாதலின் விடுத்தாம்.

---

1. கம்பரா. உருகாட்டுப்படலம் : ௨௨
2. திருக்குறள் : ௬௮௪

உலகில் மறத்தை ஒழித்து அறத்தை நிலைநாட்டுவதற் கெனத் தோன்றிய கண்ணன், தன் அன்பர்களாகிய பாண்டவர்பொருட்டுத் துரியோதனன்பால் தூதுவனாகச் சென்று, "பஞ்சவருக்காக வந்தவொரு தூதன்யான்," என, அவன் முன் நின்றான். அவன் தன்னைப் பன்முறையில் இகழ்ந்து கூறியவற்றையும் பாராட்டாமல், தான் வந்த காரியத்தை அவனுக்குத் தெரிவித்து, "நீ முன பாண்டவர்க்கு வாக்களித்தது போன்று, அவர்கள் உரிமையை அவர்கட்கு வழங்குதலே நலம். இன்றேல் இவ்வுலகததவா இழிவையும, 'சொன்ன சொல் தவறியவன்' என்னும் தேவர்களுடைய பழியையும் பெறுவ துடன், போரிலும் நுழையவேண்டி வரும்," எனப் பல அற வுரைகளையும் பகர்நதான் இவற்றுள ஒன்றையும் ஏற்றுக் கொள்ளாத துரியோதனன், "நீ செப்பிய யாவும நிகழினும் யான் கவலைகொள்ளேன். அவற்றின் பொருட்டு அப்பாண்ட வருக்கு ஒரு சிறு இடத்தையும் ஈய உடன்படேன்," என விடையளிததான். இது:

'நீவெ றுககிலெ னிருந்த மன்னவர்
திகைககி லென்பல நினைக்கிலென்
போய்ந கைக்கிலெ னுரைதத வுண்மைமொழி
பொய்த்த தென்றமரர் புகலிலென்
வேய்ம லாதவொடை யாலவ ரென்னுடன்
மிகைதது வெஞ்சமர் விளைக்கிலென்
ஈயி ருக்குமிட மெனினு மிப்புவியில்
யான வர்க்கரசி னிக்கொடேன்.'

என்னும் இச் செய்யுளால் விளங்கும்.

(தொடரும்)

# திருக்குறள் அகவல்

[வித்துவான், திரு. மா. வேதாசலம், எம்.ஏ., பி.ஓ.எல்.]

(சிலம்பு - ௨௮. பரல் - ௭, ௩௪௬-ஆம் பக்கத் தொடர்ச்சி)

## ௫. இல்வாழ்க்கை

1. இல்லறம் வாழ்வான் என்பான் ஏனை
இயல்புடை மூவர் எவர்க்கும்
நன்னெறி நின்ற நல்ல துணையே.

2. துறந்தார் என்று துவ்வார் என்று
இறந்தார் என்று எல்லார்க்கும்
இல்வாழ் குரிசில் ஏற்ற துணையே

3. தென்புலம் வாழ்வார் தெய்வம விருந்தே
சுற்றம் தானெனச் சொலலும்
ஐம்புலத் தறனை ஆற்றுதல தலையே.

4. பழியினை அஞ்சிப் பாத்தூண் வாழ்க்கை
அடைகுவன ஆயின் அவன்வழி
என்றும எஞ்சும் இயற்கை இலையே.

5. அன்பென் பதுவும் அறமென் பதுவும்
ஒருவன் வாழ்ககை உடைததேல்
பண்பும் அஃதே; பயனும் அஃதே.

6. அறத்திற்(கு) ஓதிய ஆற்றின் நீங்கா
வாழ்க்கை ஒருவன் வழங்கின்
பிறநெறிச் சென்று பெறுவ தெவனோ ?

7. இல்லற வாழ்க்கை இயல்பொடு கூடி
வாழும் வகைமை வாய்ப்பான்
புலமவிடப் புகுவான் போமவர் தலையே.

8. தத்தம் நெறியில் தவத்தரை ஒழுக்கித்
தவறு வாழ்க்கை தஙகின்
நோற்பார் தம்மின் நோன்மை உடைத்தே.

9. அறமெனச் சிறப்போ(டு) அறையப் பட்ட(து)
இல்வாழ் வாகும் ஏனை
பழிப்ப(து) இன்றேல் பழுதின் றுமே.

10. வையத் தாங்கண் வாழும் இயல்பினன்
இல்லறத் தோடே இயல்பவன்
வானோர் தம்முள் வைக்கப் படுமே.

(தொடரும்)

# வள்ளுவர் காலம்

[திரு கு. பரமசிவம்]

(சிலம்பு: உஅ, பரல: அ, ருகஉ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உடலுழைப்பால் நீரைக் கொணர்வோர் (Irrigating by manual labour) விளைவில ஐந்தில் ஒரு பகுதியையும, தோளிற் சுமந்து கொணர்வோர் (Carrying water on Shoulders) நான்கில் ஒரு பகுதியையும், ஆறு குளம் முதலியவற்றிலிருந்து நீர் பெறுவோர் (Raising waters from rivers, lakes, tanks and wells) மூன்றில் ஒரு பகுதியையும நீர் வரியாகக் கொடுத்தல்வேண்டும இஃதேயன்றிப் பலி, நிலவரி, காவல்வரி, மேய்ச்சல் நிலங்களின்மீது வரி முதலிய பல வரிகளைச் செலுத்தவேண்டும்.[1] இவ்வரிகள் போதாவென்று மற்றொரு விதியும் கௌடில்யரால் கூறப்படுகிறது இதன்படி வேதங் கற்றோரும் (Those that are learned in the vedas) வானப்பிரஸ்த நிலையில் உள்ளாரும் (Those that are engaged in making penance) கடவுளுக்கு என்றும், யாகம செய்வதற்கு என்றும் வயலிலிருந்து தாமாகவே வேண்டுமளவு தானியங்களை எடுத்துக்கொள்ளலாம்.[2] இத்தகைய நிலையில் உழவுத்தொழில் சிறக்குமா? உழவுத் தொழிலைக் காத்தல்வேண்டும் என்ற கருத்துப் படைத்தவரே கௌடில்யா என்பா. ஆயினும் அவ்வாறு கூறுவார் கூற்றிற்கு ஆசிரியர் கூறும் வரிமுறை முரண்படுகின்றது.

கௌடில்யர் கூறுவனவற்றையெல்லாம் நுணுகிப் பார்த்தால் அவர் அறத்தை ஒததுக்கொள்கிறார் என்பதும் ஆயினும் அரசியலிலோ பொருளியலிலோ அறத்தைப் போற்றவேண்டுமென்று வற்புறுத்துகிறாரல்லர் என்பதும் புலப்படும்.[3] அதாவது கௌடில்யரது பொருளாதாரக் கட்டடம் அறத்தின்மீது எழுதப்படவில்லை என்பது தெளிவு அன்புபற்றிச் சிலரும், நனகு ஆராயாதார் சிலரும் இந்நூலை மாக்கியவெல்லியன் நூலுடன் ஒப்பிட்டுப் பேசி வந்தனர். இவர்களது கூற்றை மறுக்குமுகததான் இரண்டு நூல்கட்குமஉள்ள முரண்பாடுகளையும் முனனதன் பெருமையையும் பெரிடேல் கீத் நன்கு விளக்கியுள்ளார்.[4] ஆயின் திருக்குறள் கூறும் பொருளா

---

1. Artha Sastra II, 24. Trans by Dr. R. Shama Sastri. pp 129

2. Artha Sastra II, 24. Trans Dr. R. Shama Sastri pp. 130

3. "All this only means that he acknowledges morality (Dharma) but not that he wants it to be applied in politics"— Winternity: *Some Problems of Indian Literature.* pp. 107-8.

4. A History of Sanskrit literature.

தாரமோ அறத்தினை அடிப்படையாகக் கொண்டது. எனவே, சென்னை அரசியலாரின் பொருளாதார அறிவுரையாளராக (Economic adviser to the Government of Madras) இருந்த டாக்டர் நடராஜன் கூறியதுபோன்று, “இங்ஙனம் பற்பல அடிப்படை வேற்றுமைகள் இருக்க மேலவாரியாகக் காணப்படும் சிற்சில ஒற்றுமைகளைக்கொண்டு இரு நூலுக்கும் ஒற்றுமை காண முயல்வது இரங்கத்தக்கதாகும்”[1]

இரண்டாவது: இரு நூல்களில் காணப்பெறும் கருத்துக்கள் சில ஒற்றுமையுடையனவாயிருப்பின் அவ் ஒன்றேபற்றி ஒன்றி லிருந்து மற்றொன்று வந்ததென்று கூற இயலுமா? முன்னரே சுட்டியவாறு வள்ளுவருக்கும் சாக்ரட்டீசுக்கும் காணப்படும் கருத்தொற்றுமைகளைக்கொண்டு சாக்ரட்டீஸ் வள்ளுவரைப் பின்பற்றினர் என்று சொல்லக்கூடுமா? அன்றியும் மொகலாயப் பேரரசின் அமைச்சராகத் திகழ்ந்த அபுல்பாசல் எழுதிய நூலில், “அரசன் அறிவின்வழி நிற்றல் வேண்டும். தீராச் சினத்துக்கு இடங்கொடுத்து நெறியல்லாதவற்றைச் செய்தல் கூடாது. தீநெறியிற் சென்றோரும் திருந்தும் முறையில் அரசன் பெருந்தன்மை யுடையவனாதல் வேண்டும்” என்று கூறியுள்ளார்[2] இக்கருத்தே,

> “கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
> நீங்காமை வேண்டு பவர்” (திருக்குறள்: ௫௬௨)

என்னும் குறளில் கூறப்பட்டுள்ளது. இதன்காரணமாக அபுல் பாசலை வள்ளுவர் பின்பற்றினர் என்று கூறலாகுமோ? அன்றியும் இமாம்ஷேக் சாஅதி ஷிராஜி ரஹமதுல்லாஹி எனனும் பாரசீகக் கவிஞர் இற்றைக்கு ஏறத்தாழ எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்டு வாழ்ந்தவராவர். இவர் குலிஸ்தான் (மலர்த்தோட்டம்) போஸ்தான் (பழத்தோட்டம்) என்னும் நூல்களை எழுதியுள்ளார். இவற்றில் காணப்பெறும் கருத்துக் களிற் பல குறளோடு ஒற்றுமையுடையனவாகும். ஒன்றை மட்டும் காண்போம். “சாஅதி சொல்கிறார், சிங்கத்தைப் பழக்கும் ஒருவனிடம் சிலர் வினவினர், ‘நீ ஏன் இந்தத்

1. வெள்ளிவிழா மலர் pp. 300.

2. “The King ‘makes wrath the tyrant, pays homage to wisdom so that blind rage may not get the upper hand and inconsiderate success overstep the proper limits’ and ‘sits on the eminence of propriety, so that those who’ ve gone astray have a way left to return”—The Ain-i-Akbari trans. by H. Bcochmann. Vol. I. p. IV of Abul Fazal's preface 1 Quoted by C. S. Srinivasachari. *Indian Historical Quarterly* Vol. IX 1933.

தொழிலை மேற்கொண்டாய்?' என்று. 'சிங்கம் உண்டது போக மீதியுணவு எனக்குக் கிடைக்கிறது. மேலும் அதன் அருகேயிருக்கும் நான் என் எதிரிகளிடமிருந்து பாதுகாக்கப் படுகிறேன்' என்று அவன் பதிலளித்தான்.

"'நீ அதன் பாதுகாவலில் இருப்பதாகச் சொல்கிறாயே! அதனிடம இன்னும் கொஞ்சம் ஏன் நெருங்கிப் பழகக்கூடாது?' எனறு கேட்டார்கள்.

"அவன் சொன்னான்: 'அதற்கு இரையாகிவிடாமல் இருப்பதற்குத்தான்'

"(கவி) மசூவிகள் நெருப்பை வணங்குகிறார்கள். ஆனால் அதில் விழுந்தால் சாமபலாகிவிட வேண்டியதுதான்.

"(நீதி) அரசனிடம் நெருங்கிப் பழகுபவனுக்கு ஒரு தடவை பொற்கிழி கிடைத்தால் ஒருதடவை தலைக்கே ஆபத்து வரலாம ஆகவே மன்னரைச் சேர்நதொழுகுவோர் மன்னர் நிலைமையை அறிந்து விழிப்புடன் இருக்கவேண்டியது அவசிய மாகிறது (குலிஸ்தான். அத்தியாயம் 1. கதை 15)"[1] இக் கருததே,

> "அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
> இகல்வேந்தாச சோந்தொழுகு வாா" (திருக்குறள். சுகக)

என்னுங் குறளிலும் கூறபபட்டுள்ளது. இதனாலேயே சாஅதிக்கு வளளுவா பிற்பட்டவா என்றோ, சாஅதி குறளை எடுத்தாண் டார் என்றோ முடிவு கட்டலாகுமா? ஆங்கிலப் பழமொழி பொன்று கூறுமாறு வேறுவேறு நாட்டிலுள்ள சிறந்த அறிஞ ரின் சிந்தனையில் தோன்றும் கருததுக்கள் ஒத்திருக்கலாமே![2] ஒருவரைப் பார்த்தே மற்றவர் கூறினர் என்பது பொருந்துமா?

மூன்றாவது: ஒன்றிலிருந்தே மற்றொன்று வந்திருக்க வேண்டுமெனின் பொருட்பாலையே கௌடிலயா பின்பற்றினர் என்று கூறுவது பொருநதுமென்று தோன்றுகிறது. கௌடில்யர் கி. பி. 4-ம் நூற்றாண்டினர் என்று கூறப்படுகிறது. வள்ளுவரோ கி. மு. இரண்டாவது நூற்றாண்டினர். ஆயின் காலத்தை நிறுவும் முயற்சிக்குக் காலத்தையே வாதமாகக் கூறக்கூடாதெனலாம். அகச்சான்றுகளும் உளவென்பதனாலேயே இவ்வாறு கூறப் பட்டது. கௌடில்யர் தென்னாட்டு முன்குடுமிப் பார்ப்பனர் என்பது முன்னரே குறிக்கப்பெற்றது. அவரது நூலின் பல

1. Quoted by ரா. பா. மு. கனி: வெள்ளிவிழா மலர். pp. 180.
2. "Great men think togather
And Foolish minds work togather"

பகுதிகளும் அவர் தமிழறிந்தவர் என்று கூறுகின்றன. உழவு பற்றிய பகுதியில் எவ்வெவ் வித்துக்களை எவ்வெக்காலங்களில் விதைக்கவேண்டுமே என்று கூறிவருவனவும், கள்ளின் வகைகளைப்பற்றிக் கூறுவனவும் அவர் சங்ககாலத் தமிழ்நாட்டினையறிந்தவர் என்பதனைக் காட்டும். அன்றியும் அரசனைப் பற்றிக் கூறும்பொழுது கௌடில்யர் அரசன் தன் குடிமக்களை அவைக்கு வெளியே காத்திருக்கச்செய்தல் தகாது எனவும் குடிமக்களின் காட்சிக்கு எளியனாக இல்லாத மன்னன் மக்களின் வெறுப்பைத் தேடுவதோடு பகைவர்க்கும் இரையாகிறான் எனவும் கூறியுள்ளார்.[1] இது,

> "காட்சிக் கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
> மீக்கூறும் மன்னன் நிலம்" (திருக்குறள் ௩௮௬)

என்னும் குறளின் விளக்கம் போன்றுள்ளது. குறளைக் கௌடில்யர் அறிந்திருந்தனர் என்பதற்கு மற்றோரிடம் தெளிவாகச் சான்றுபகர்கிறது. பகைவரை வெல்லக்கருதும் அரசன் வலி, இடம், காலம் மூன்றனையும் அறிந்து போர் துவக்க வேண்டுமே என்பதனைப்பற்றிக் கூறவந்த கௌடில்யர் இம்மூன்றனுள்ளும் இன்றியமையாதது யாது என்னும் ஆராய்ச்சியில் ஈடுபடுகிறார். வலியே சிறந்ததென்பார் கூற்றையும், இடமே சிறந்தது என்பார் கூற்றையும், காலமே சிறந்ததென்பார் கூற்றையும் மறுத்து மூன்றுமே இன்றியமையாதன என்னும் கொள்கையை வற்புறுத்துகிறார். அவ்விடத்தில் "நிலத்தின்கண் முதலை வருமாயின் ஒரு நாய்கூட அதனை இழுத்துச் செல்லக் கூடும். ஆயின் தன்னிடத்தில் முதலை இருக்குமாயின் நாயை இழுத்துவிடும் எனவே இடந்தான் சிறந்ததெனபர் சிலர்.

"பகலில் காக்கை ஒரு ஆந்தையையும் கொன்றுவிடும். இரவிலோ எனின், ஆந்தை காக்கையைக் கொன்றுவிடும். எனவே காலந்தான் சிறந்த"தென்பர் சிலர்.

"கௌடில்யர் இரண்டுமே இல்லை யென்றும் வலி, இடம், காலம் ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று துணைபுரிவன என்றும் கூறுகிறார்" என அர்த்தசாஸ்திரத்தில் வருகிறது. (IX 1.)[2] இப்பகுதியைப் படித்த அளவிலேயே,

---

1. I. 19. "When in the Court he shall never cause his petitioners to wait at the door, for when a king makes himself inaccessible to his people ...he may be sure to engender Confusion in business and to cause thereby public dissatisfaction and himself a pery to his enemies." *Artha Sastras.* Trans, by Dr. R Shama Sastry pp. 38.

2. "Some say that place is the best for the reason that a dog seated in a convenient place can drag a crocodile and that a crocodile in low ground can drag a dog.

" பகல்வெல்லும் கூகையைக் காக்கை ; இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது "  (திருக்குறள் : சஅக)

" நெடும்புனலுள் வெல்லும் முதலை ; அடும்புனலின்
நீங்கின் அதனைப் பிற "  (திருக்குறள் : சகரு)

என்னும் இரு குறளின் வேற்றுருவமே என்பதை உணரா திருத்தல் இயலாது இங்குக கௌடில்யர் தாம் பொருட்பாலைப் பினபற்றினார் என்பதற்கு அவா பிறரது கூற்றுககக கூறுதலே சான்றாகும.

இதுகாறும கூறியவற்றால் அர்த்த சாஸ்திரத்துக்கும் குறளுககும் மேல்வாரியாகக் காணப்படும் ஒற்றுமைகளைக் கொண்டு குறள்தான் மற்றையதைப பின்பற்றியது என்று கூறுதல் ஒவ்வாது எனபதும அவ்வாறு கூறிக குறளின் காலத்தை மாற்ற முற்படுதல் அடாது என்பதும் விளங்கும்.

## ச. காமத்துப்பால்

இனிக் காமததுபபாலில் காணப்படும இரு குறட் கருத் துககள வாத்ஸ்யாயனர் காமசூத்திரத்தில வரும இரு கருததுகக ளோடு ஒற்றுமையுடையன என்றும், வள்ளுவர் வாத்ஸ்யாயன ரைப பின்பற்றினர் என்றும தமிழன்பர் எழுதியுள்ளார். வள்ளுவர் காமத்துப்பாலைக் கூறும்முறை வேறு, வடநூலார் கூறுமமுறை வேறு. வள்ளுவர் வடநூலாருக்குக் கடமைப் பட்டவரல்லர் என்பதனைப் பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுநதரனார் நன்கு விளக்கியுள்ளனர்[1] எனவே, அவ்வாராய்ச்சி ஈண்டு வேண்டா. ஒன்றுமட்டும் குறிக்கலாம். இக்கட்டுரையைப் பற்றி எழுதுங்கால் "இநது" இதனைப் பாராட்டியதோடு அமையாது இவரது முடிவுகள் பெருமதிப்பிற்குரியன என்றும் குறிததுள்ளது.[2]

---

"Others say that time is the best for the reason that during the day time the crow kills the owl and that at night the owl the crow.

"No says Kautilya of strength, place and time each is helpful to the other"—Ibid. pp. 368.

1. வெள்ளிவிழா மலா : pp. 54-94.

2 "Prof. T. P. Minakshi Sundaram's essay on Kamathu Pal is highly learned and places before the reader Several new points. His Comparisons of Kural with Sanskritic texts are very interesting. Several view points on the Composition of the chapter and its subject matter are taken for study and valid conclusions are arrived at"—The *Hindu* Weekly Review, October 19-1953. pp. 7.

## ௫. காலம்

இதுகாறும் 'திருக்குறள் எந்நூலுக்கும் கடன்பட்டதன்று; தனிமுதல் நூல்' என்று கண்டோம். கடன்பட்டதென்று முதன் முதலிற் கூறியவர் இத்தமிழன்பரல்லர் என்று முன்னரே கண்டோம். தமிழைக் கற்றாலும், தமிழையே பிழைப்பாகக் கொண்டாலும், வடமொழிக் காதலைவிடாது அதனையே உயர்த்தித் தமிழைப் பழிக்கும் ஒரு படித்த திருக்கூட்டம் இவ்வாறு கூறிவந்தது. அத்திருக்கூட்டத்தாரின் இயற்கை அது. அவர்கள் இவ்வாறு கூறுவதன் காரணம் யாதென்பதனை அவர்கள் கூற்றைக்கொண்டே அறியலாம். கனகசபைப்பிள்ளையவர்கள் நூலைப்பற்றி எழுதுங்கால் அவர்கள் திராவிடரின் சிறப்பியல்புகளை மிகைப்படுத்திக் கூறுகிறார் என்றும், ஸ்லேட்டர் நூலைப் பற்றி எழுதுங்கால் இவர் இந்தியக் கலாச்சார வளர்ச்சியைத் தவறாகப் புரிந்துகொண்டுள்ளார் அகஸ்தியர் காலத்துக்கு முன்னர்—அஃதாவது ஆரியர் தென்னாட்டுக்கு வருமுன்னர்—தமிழ் அரசியல் சிறப்புற்றிருந்தது என்று நிறுவும் முயற்சி வெற்றிபெறவில்லை யென்றும்[1] தற்பொழுது சிறிதளவேனும் ஆரிய ஆதிக்கமில்லாத இலக்கியம் ஒன்றேனும் தமிழ்மொழியில் இல்லையென்றும்[2] அத் திருக்கூட்டத்தைச் சேர்ந்த ஒருவர் எழுதியுள்ளார். அஃதாவது ஆரியர் இந்நாட்டுக்கு வருமுன்னர் தமிழர் அரசியலறியார், இலக்கியம் எழுதினாரல்லர், கலாச்சாரத்தைக் கண்டாரல்லர் என்பவை இப்பெரியார் மறைமுகமாகக் குறிப்பிடுவனவாகும். மற்றொரு பெரியார் (அவர் இதே பல்கலைக் கழகத்தில் வரலாற்றுப் பேராசிரியராக விளங்கியவர் என்று கருதுகிறேன்) வெளிப்படையாகவே எழுதியுள்ளார்: "தற்காலத்தில் ஆரியரல்லாத தமிழ்கற்றோர் சிலர் தமிழர் ஆரியக்கலாச்சாரத்துக்குக் கடமைப்பட்டவரல்லர் என்றும், முற்காலத் திராவிடர் சிறிதேனும் ஆரியர் அல்லது பிறர் ஆதிக்கத்துக்கு உட்படாதவர் என்றும், திராவிடருக்கென்று தனிக் கலாச்சாரமும் இலக்கியமும் இருந்தனவென்றும் கூறிவருகின்றனர். ஆயின் பிற அறிஞருமிலரல்லர் இவ்வறிஞர் கருத்துப்படி

---

1 "Kanakasabhai no doubt much overrated the attainments of Dravidians.... Dr Slater's book on 'Dravidian Elements' betrays many signs of an utter misreading of the Story of Indian Culture. The attempted reconstruction of a pre Aryan Tamil Polity before the days of Agastya has not been a success."—K A. Nilakanta Sastri, *The Pandiyan Kingdom*, pp. 2. foot note.

2. "On the other hand we have at present no traces of any literary work in the Tamil language, however ancient, which does not betray Sanskrit influence to some extent"—Ibid. pp. 2.

தென்னாட்டுக் கலாச்சாரத்தின் வரலாறே ஆரியா தென்னாட்டுக்கு வந்தபின்னரே துவங்குகிறது ஆரியக்கலாச்சாரம் தெனனுட்டில் போர்வழியாகப பரவவிலலை. ஆனால், அமைதியாகப படிப்படியாக நுழைந்தது. எவ்வாறாயினும திருவள்ளுவர் வடமொழி நூலகளை நன்கு பயின்றவர் என்பதும் சிறபபாக அர்ததசாஸதிரம, தர்மசாஸ்திரம், காமசாஸ்திரம் ஆகியவற்றை நன்கு கற்றவர் என்பதும மறுக்கமுடியாதனவாகும"[1]

இத்திருக்கூட்டத்தார் இவ்வாறு கூறுதற்கு மற்றொரு காரணமும் உண்டென்று தோனறுகிறது மேனாட்டறிஞர் பலா, திருக்குறள ஆரிய மூடக்கொளகைகளை மறுத்து, உயாநத தமிழ்பபண்பாடடை விளக்குகிறதெனறு கூறியுள்ளனர். ரெவரண்டு ஈ ஜே ராபினசன் என்னும் அறிஞர், "பார்ப்பனர் அந்தணா என்னும பெயரால அழைக்கபபடுதற்குத தகுதியுடையரல்லர் எனறு ஆசிரியர் இடித்துக் கூறுகின்றார். சமயப்போலி, சமயககொடுமை, பொய்யொழுக்கம ஆகியவை நூல முழுதும் கணடிககபபட்டுள்ளன" என்று கூறுகினறார்.[2]

Rev W H ட்ரூ என்பாா, "........ஒரு வகுபபினாக்கு மட்டும் உரியகொளகைகளை மதியாது ஒதுக்கி, மககள அனைவர்க்கும ஒருஙகே பொருநதும உண்மைகளை மட்டும ஆசிரியர் நூலில கூறியுளளாா இதனால மனு நூலிலும் மற்ற சாததிரங்களிலும கூறும பொருளற்ற மூடப் பழக்கவழக்கங்கள் நீககப்பட்டு, நூல் மேமபாட்டுடன் விளஙகுகின்றது" என்று கூறுகிறார்.[3]

தமிழைப படித்துத் தமிழ்நாட்டில் வாழ்ந்து தமிழுக்கே இழுக்குதேடும இநதப படிதத திருகூட்டத்தாாதாம் முதன் முதலாக வளளுவா வடமொழிவாணருக்குக் கடன்பட்டவா என்று கூறினா அதனையே இததமிழனபரும கூறினர் அஃது இவரது ஆராய்ச்சியின ஒரு பகுதியே மறறொரு பகுதி காலம் பற்றியது ஆகும். திருக்கூட்டத்தார் வள்ளுவரைக் கடனாளியாக்கினரேனும காலததால் பிற்பட்டவராக்கினரலலர். எஞ்சிய அத்திருப்பணியைத் தமிழன்பர் செய்ய முற்பட்டார்.

குறள் வடநூலகளைப் பின்பறறியது என்று கொண்டு அவ வடநூலகளுககுப பிற்பட்ட காலததை குறளின் காலமாக இத் தமிழன்பா வரையறுககிறார் "மேறகாட்டிய வடமொழி நூல்

---

1. Quoted by ஆசிரியர் இறையனாா "திருககுறள ஆராய்சசி" pp. 56. 2. Ibid

3. தமிழ்ச்சுடா மணிகள் · 2nd Edition pp 76-7.

களுள் சாணக்கியர் அர்த்த சாஸ்திரத்தின்காலம் சுமார் கி. பி. 300 என்றும், வாத்ஸ்யாயனா காமசூத்திரத்தின் காலம் சுமார் கி. பி. 400 என்றும் ஆசிரியா பெரிடேல் கீத் (A history of Sanskrit literature, p. 461) கூறினர்"[1] என்று இத்தமிழன்பர் எழுதியுள்ளார்.

முதலாவது இவர் காட்டியுள்ள மேற்கோளே தவறுடைய தாகும். பெரிடேல் கீத 461-வது பக்கத்தில் அர்த்தசாஸ்திரத்தின் காலம் சுமார கி. பி. 300 என்றும் காமசூத்திரத்தின் காலம சுமார கி. பி. 400 என்றும் கூறவேயில்லை கீத, "அர்த்த சாஸ்திரத்தின் காலம் வாதஸ்யாயனர் காமசூத்திரத்துக்கு முற்பட்டதாகும் காமசூத்திரம கி பி 4-ம நூற்றாண்டில தோன்றியதாகும்.. .இநநூல் (அர்த்தசாஸதிரம) யாதேனுமோர் அரசவையைச் சாாநத ஒரு அலுவலாளரால யாககப்பட்டிருக்கலாம். கி. பி. 300-ல தோன்றியிருக்கலாமென ஊகிக்க முடியும; திட்டமாகக்கூற இயலாது" என்றே கூறியுள்ளனர்.[2] கீதே 469-வது பக்கத்தில காமசூத்திரததைபபறறி எழுதுஙகால, "இதன காலம் கி. பி. 4-ம நூற்றாணடென்று கூறுவது பெருமபாலும் ஆரூடம் கணிப்பது போன்றதே ஒருவேளை உண்மையினின்று மிகவும மாறுபட்டதாகலாம. எவ்வாறேனும இநநூலின் காலம் கி. பி 500 எனறு கூறுவதே பொருததமாகும ஏனெனில் அர்த்தசாஸதிரம கி. பி 400-க்கும பிறபட்டதாகுமேயன்றி

---

1 "According to the new school of non Aryan Tamil Scholars, that is rising up, there has not been much of indebtedness of the Tamils to the early Aryan culture and the early Dravidians had, independently of the Slightest Aryan or other influences, their own culture and literature. On the other hand there are not wanting Scholars who say that the history of South Indian culture begins, properly speaking, only with the coming of the Aryans to the South. The introduction of Aryan culture and the South was the result not of conquests, but of a peaceful and gradual process of penetration. Be this point as it may it is not open to much opposition that Tiruvalluvar was familiar with Sanskrit literature, and particularly with the literature bearing on the Artha Sastra & Dharma Sastra not to speak of the Kama Sastra."—C. S Srinivasachariar, *Indian Historical Quarterly*. Vol. IX. 1933. pp. 245.

2 "Further the work is before the Kamasutra, whose date as will be seen, may be the fourth Century A D .. ..That the work was a product of C 300, written by an official attached to some court, is at least plausible, if it cannot be proved." Berriedale A. Keith, *A History of Sanskrit Literature*, pp. 46-1.

முற்பட்டதாகாது" என்று வரைகிறார்.[1] எனவே, அர்த்த சாஸ்திரத்தின் காலம் கி. பி. 300 என்றும் காமசூத்திரத்தின் காலம் கி பி 400 என்றும் கீத் கூறியுள்ளதாக எழுதுவது எவ்வாறு ஒக்கும்?

இரண்டாவது, கீத இந்நூலில் கூறியதற்கும் வேறொரு நூலில் கூறியதற்கும் முரணபாடுகள் காணப்படுகின்றன. இந்நூலில்[2] இவா காமசூததிரததைக் காளிதாசருககுப பிற்பட்டதென்றுகொண்டு அதன காலததை வரையறுககிறார். இவரே வேறொரு நூலில காமசூத்திரம் காளிதாசருக்கு முறபட்டதென்று கூறியுள்ளார்.[3] இவ்வாறு கீத கூறுவனவே முன்னுக்குப பின் முரணபடுகின்றன.

மூன்றாவது கீத கூறுவன முடிந்த முடிபென்று மேனாட்டாரே கொண்டனரல்லா. கீத கூறுவனவற்றைப பல சான்றுகள் காட்டி மறுத்து, "இபபொழுதுள்ள நிலையில அர்த்தசாஸ்திரம் மௌரியரின் காலத்தைச சேர்ந்தது என்று கொளவதற்கு ஒரு தடையுமில்லை. ஒருவேளை லிபமன் கூறியதுபோல இந்நூலில பிறகாலததில் இடைச்செருகல்கள நிகழ்ந்திருககலாம்" என்று ஹெரபாட் எச். கோவன் எழுதியுள்ளனர்.[4]

நான்காவது: அர்த்தசாஸ்திரததின் காலம் பற்றியுள்ள கருததுவேற்றுமைகளுககு இணை, உலகில் வேறு எம்மொழியின் இலககிய வரலாறறிலுமே இல்லையென்று கூறலாம். கௌடிலயரைச சந்திரகுப்தமௌரியரின் அமைச்சராகக் கொணடு இந்நூலின் காலம கி. மு நான்காம் நூற்றாண்டென்று டாக்டா ஆர். சாமா சாஸ்திரி ("Artha sastra" Trans. Preface) நாராயண் சந்திர பண்ட்யோபாதயாயா ("Kautilya a critical and Historical study") கணபதி சாஸ்திரி (The Artha sastra of Kautilya") நரேந்திரநாத் லா ("Studies in ancient Indian

---

1. "The dating of the work in the fourth century A. D is thus purely speculative, if it is perhaps not far from the truth. It may well be, however, that this is too high and that A. D. 500 is a reasonable date, for the Artha Sastra may not be earlier than C. A. D. 400 or even later."—Ibid pp. 469.

2. pp. 469.

3. "Classical Sanskrit literature" pp 27-114.

4. "At present there seems to be no absolute bar to the acceptance of the Mauryan date, even though, with Lippman, we may believe that additions have been made to the original work"—Herbert H. Gowen D. O. (1931) *A History of Indian Literature*, pp 175.

polity") ஜயஸ்வால், எச். சி. ரே, டி. ஆர். பந்தர்கார், ராதா குமுதமுகர்ஜி ஆகிய இந்திய ஆசிரியர்களும ப்ளீட் (Fleet) ஜாகோபி, மேயர் (Meyer), வின்ஸெண்ட் ஸமித், ஹெர்பர்ட எச். கோவன் ஆகிய மேனாட்டாசிரியாகளும கருதுகின்றனா. இந்நூலின் காலம கி. பி. முதலநூற்றாண்டென்று ஆர். ஜி. பண்டர்காரும், கி. பி 300 என்று ஜாலி, ஸமித, வின்டர்நிட்ஸ் ஆகியோரும, கி பி 400 என்று பெரிடேல் கீததும் கூறுகின்றனர். பமபாய் பாரதீய வித்தியாபவன் வெளியிட்டுள்ள ஏஜ் ஆப இம்பீரியல் யூனிட்டி எனனும இநதிய வரலாற்றின் இரணடாம் பகுதியில இந்நூலின் காலம வரையறுக்கப பெறறிலதேனும மௌரியர் காலததுககுப பிற்பட்டதென்று நிறுவப்படுகிறது. இவையெல்லாம அர்ததசாஸதிரததின காலம் இன்னும் வரையறுககப்பெற்றிலது என்பதை வலியுறுததும. திரு. இராமச்சநதிர தீக்ஷதர் பிறிதோரிடததில் கூறியதுபோன்று வரையறுக்கப்பெறாத ஒரு காலததை அடிபபடையாககொணடு மற்றொரு நூலின காலததை வரையறுக்க முற்படுதல சிறந்த வாதமாகாது[1] பெரிடேல கீத்தும இததகைய வாதததை ஒபபுக்கொள்கிறாரல்லா. ஆாத்தசாஸதிரததின் காலததைப்பற்றி யெழுதும் பொழுது, பாசா நூலுக்கும் இதற்கும ஒற்றுமை தெனபடுகிறதென்றும, ஆயின பாசாகாலம இனனும வரையறுககப்படாததால், அதைக்கொண்டு இநநூலின் காலததை நிலைநாட்ட முடியாது என்றும எழுதுகிறாா.[2] எனவே, காலம வரையறுக்கப் படாத வடநூல்களின் துணைகொணடு வள்ளுவரது காலத்தை நிறுவ முற்படுதல பொருந்தாது.

ஐநதாவது: வளளுவர் காலமாக இத் தமிழன்பா கூறுவது யாது என்பதே விளஙகவில்லை. "சுமார் கி பி 600-ல் வள்ளுவா வாழநதனர் என்று நாம கொள்ளலாம்" என சரிடஙகளில்[3] எழுதியுள்ளார். இதன்பொருள் வளளுவா காலம கி. பி. 7-ம் நூற்றாண்டின் துவக்கம் என்பதாகும். ஆயின் இவரே "திருககுறளை இயறறிய வளளுவா கி பி. 6-ம் நூற்றாண்டின் தொடககததில வாழ்ந்தவர் எனறு கொள்வது மிகப்

1. "The date of these works is still a bone of contention among scholars. From one unknown to another unknown will be no serious argument"—V R R Studies in Tamil Literature and History, pp 76.

2 "The identity of the exhortation to the soldiers with a verse of Bhasa may denote borrowing, but, as Bhasa's date is uncertain this does not help much to a definite result."—A. B. Keith, A History of Sanskrit Literature, pp. 461

3. *தமிழசசுடா மணிகள்*, pp. 68 and 72.

பொருத்தமாதல் காணலாம்" என்று மூன்றாவதிடத்தில்[1] எழுதுகிறார். இவற்றுள் "யாவோவாயினன் ?"

ஆறாவது: இத்தமிழன்பரே வேறொரு நூலில், "முற்சங்க இலக்கியம் பிற்சங்க இலக்கியம் என்று இரண்டு கூறுகளாக இந்த இலக்கியங்களைப் பகுத்துக்கொள்வது நலம். இவற்றுள் முற்சங்க இலக்கியங்கள்: நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு என்ற தொகை நூல்களும், பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை யொழிந்த ஏனைய பாட்டுக்களுமாம். பிற்சங்க இலக்கியங்கள்: கலித்தொகை, முருகாற்றுப்படை, பரிபாடல் என்பனவாம்"[2] எனவும், "முற்சங்கப் புலவர்கள் கி பி. 100 முதல 400 வரையுள்ள காலப்பகுதியில் வாழ்ந்தவர்கள் என்று நாம் பொதுப்படக் கொள்ளலாம் பிற்சங்கப் புலவர்கள் கி பி. 450 முதல் கி. பி 600 வரையுள்ள காலப்பகுதியில் வாழ்ந்தவர்கள் ஆகலாம். இவர்களுள் முற்சங்கப் புலவர்கள் இயற்றியவை சுமார் 5-ம் நூற்றாண்டிலும், பிற்சங்கப் புலவர்கள் இயற்றியன சுமார் 7-ம் நூற்றாண்டிலும் தொகுக்கப்பெற்றன என்று கொள்ளலாம"[3] எனவும் எழுதியுள்ளார் முற்சங்க இலக்கியங்களிலேயே குறள் எடுத்தாளப்பட்டுள்ளதனை அனைவரும் அறிவர். இவர் கூறும வள்ளுவரது காலம ஒப்புகொள்ளப்படின் கி. பி. 600-ல் தோன்றிய குறளை கி பி. 100-ல தோன்றிய முற்சங்க இலக்கியங்கள் எடுத்தாண்டமை எவ்வாறு பொருந்தும ?

ஏழாவது: தமிழ்நாட்டில் கி. பி 6-ம் நூற்றாண்டிலேயே பல்லவரது ஆட்சி நிலைபெற்றுவிட்டது அதற்கு முன்னர் களப்பிரர் ஆட்சிக்காலம ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகளாகும். பல்லவர் பெரும்பான்மையும வடமொழியையே வளர்த்தனர் என்பதும தமிழ் அக்காலத்தில் அத்துணைச் செழிப்படையவில்லை என்பதும வரலாறுகண்ட உண்மைகளாகும் இத்தகைய சூழ்நிலையில் ஒப்பற்ற அறநூலாகிய திருக்குறள் தோன்றிற்று என்று கூறும்பொழுது வரலாற்றுணர்ச்சியும சூழ்நிலையுணர்ச்சியும் பெரிதும் போற்றப்படவில்லை ஆகவே இத்தமிழன்பரது முடிவை ஒத்துக்கொள்ள இயலாதென்று தோன்றுகிறது.

இறுதியாக வள்ளுவரும ஏலேலசிங்கரும் நண்பர் என்றும், ஏலேலசிங்கரின் வேண்டுகோட்கிணங்கியே வள்ளுவர் குறளை எழுதினார் என்றும ஒரு வரலாறு கூறும். ஏலேலசிங்கரென்

1. Ibid. pp 77
2. தமிழர் பண்பாடு: pp. 20-1.
3. Ibid pp. 21.

பவர் சோழநாட்டிலிருந்து ஈழஞ்சென்று அங்குச் செந்தமிழ் வளரச்செய்த செம்மலாய்க் கி. மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பது மகாவமசத்தால் அறியக்கிடக்கிறது. எனவே அவரது நண்பராகிய வள்ளுவரும் அக்காலத்தவரே யென்று நாம் துணியலாம். இம்முடிவே தமிழ் இலக்கிய வரலாற்றோடும் தென்னாட்டு வரலாற்றோடும் பொருந்தி வருவதாகும் தக்க சான்றுகள் காட்டப்பெற்று வேறு முடிவு நிறுவப்பெறும்வரை, இம்முடிவை மாற்றிக்கொள்ளவேண்டிய தேவையில்லை.

டாக்டர் கால்டுவெல்—"தமிழ் நூல்களில் மிகவும் சிறந்த நூலாக எல்லோராலும் மதிக்கப்படும் திருக்குறள், அமைப்பிலும் யாப்பிலும் வடமொழித்தொடர்பு சிறிதுமில்லாமல் தனிச் சிறப்புடன் அமைந்துள்ளது" என்று எழுதுகிறார்.[1]

சார்லஸ் E. கவர் என்பார், "இறையுண்மையை நிலைநாட்டுவதற்கும், பார்ப்பனர்கள் பின்பற்றிவந்ததும் சடங்குகள் நிறைந்ததுமாகிய, பல தெய்வ வணக்கத்தைக் கண்டிப்பதற்கும், திருவள்ளுவரையும் சிவவாக்கியரையும் போன்ற அறிஞர்கள் தம் சொல்லாற்றலையும் எழுத்தாற்றலையும் பயன்படுத்தி வந்தார்கள்... திராவிடர்களின் மனப்பண்பு உயர் ஒழுக்கத்தையே நாடி நின்றது என்பது இந்நூலால் தெளிவாக விளங்குகின்றது. நெருப்பினாலும் போரினாலும் இரக்கமற்ற கொடுமையினாலும் பார்ப்பனர் புத்தமதம் இந்தியாவில் பரவாதபடி அழித்தனர். திருக்குறளை அழிப்பதற்குத் தகுந்த எந்தக் காரணத்தையும் பார்ப்பனர் கண்டிலர்" என்று எழுதுகிறார்.[2]

இவற்றையெல்லாம் கண்ட திருக்கூட்டத்தார் இவற்றை எவ்வகையில் மறுக்கலாம் என்று கருதினர் இறுதியில் வள்ளுவரும் வடவருக்குக் கடமைப்பட்டவர் என்று எழுதத் துணிந்தனர்.

---

1. Quoted by ஆசிரியர் இறையனார் "திருக்குறளாராய்ச்சி" pp. 56.

2. Ibid pp 56-58.

# செய்திகளும் குறிப்புக்களும்

## (க) தூத்துக்குடி சைவசித்தாந்தசபை ஆண்டுவிழா

தூத்துககுடி **சைவசித்தாந்த சபையின்** (எ0) **எழுபதாம் ஆண்டு நிறைவுவிழா** நாளிது மேமாதம் 29, 30 ஆகிய இரண்டு நாட்களிலும் நிகழும். அப்பொழுது மதுரைத திருஞானசமபநதசுவாமிகள் ஆதீனம், இளவரசு திருப்பெருந்திரு திருவருளதவயோக **சோமசுந்தர தேசிக பரமாச்சாரியசுவாமிகள்** அவர்கள அன்புடன தலைமைபூண்பார்கள். மதிநுட்பம நூலோடுடைய அறிஞாகள் பலர், அரும்பெரும் விரிவுரை யாற்றுவாாகள. விளகக நிகழசசி பின் வெளிவரும எனத் தெரி கின்றது.

## (உ) பெரியபுராணப் பேருரை அரங்கேற்றம்

கோயமுத்தூா சிவக்கவிமணி, திருமுறைத்திரு. **சீ. கே. சுப்பிர மணியமுதலியார**வாகள், சேககிழாரடிகள அருளிய திருதொண்டர் புராணம என்னும பெரியபுராணததுககு விளககமான பேருரை ஒனறு திருவருட்டுணையால் யாததுள்ளாாகள். அவர்கள் திருமுறைகள் பன் னிரணடினையும் சீருற ஆண்டுககொருமுறை ஓதி நிறைவுற்று வருமுறை யாக நாறபது யாண்டுகளுககுமேல ஓதிவருகினறாாகள். சேககிழா ரடிகள் போனறே உரையையும் திருததிலலைப் பொன்னம்பலவாணர் ஆயிரககால் மண்டபததில் துவஙகி 6,7-5-54-இல் நிறைவுவிழாவும் மிகச சிறப்பாக நடைபெற்றது.

தொன்மைபோன்று திருமடமுதலிகளும், கோவேந்தர், பாவேந்தர், நாவேநதா, பூவேநதா, மெயயடியாா, பொயயிலபுரவலா, தனிப்பேரன் பா முதலியோா குழுமிய பேரவையில், தலைமை, வாழத்து, விரிவுரை, பொன்னுடை, பொற்கிழி முதலிய பன்னருஞ சிறப்புகளுடன் சிறப் பிததுப் போற்றினர். நிகழசசிமுறைவிரிவு விளக்கமாகப் பின் வெளி வரும

## (ங) தாய்மொழி முதன்மைபற்றி திரு. இராசேந்திரபிரசாது கருத்து

“அநதந்த நாட்டு மொழி, கலை, பணபாடு முதலியன வளர்சசியுற வேண்டும எனனும் ஆாவம் நாடெங்கும் வளாநதுவருவதுகணடு மகிழசசியடைகிறேன் அநதந்த மாநிலஙகளின மொழி, கலை, பணபாடு ஆகியவற்றின வளாச்சியினால் மட்டுமே இந்தியா அதன் முழுச சிறப்பை யும் எய்தமுடியும்” எனறு அணமையில் நாகபுரியில் விதாப்ப சாகிதய சஙகப் புதுககட்டிடத திறப்புவிழாவின்போது கூறினர்.

விதாப்ப சாகிதய சஙகம என்பது மராத்தியமொழி வளர்சசியையே முதன்மையாகக் கருதி 1923-ஆம் ஆண்டில துவககப்பட்டதாகும். மததியபிரதேசத்தில் மராததி பேசும் மக்கள்வாழ் பகுதிகளில் இத்தகைய சஙகஙகளின் ஐநது கிளைகள் இருககினறன.

**குறிப்பு:** இஙஙனம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மொழிப் பற்று வளாநது வருவதும், அதுகண்டு ஆட்சியாளரே தெளிவுபெறுவது மான இத்தகைய சூழநிலையில் நந்தமிழகம இனனும் எத்துணைப் பொறுப்பேற்க வேணடும் என்பது எணணற்பாலது.

(௪) மொழிக்கல்வி குறித்து நேருவின் கருத்துரை

"இந்தியாவின் சிறந்த மொழியாகிய தமிழை நான் பயிலவில்லை. இனிப் பயிலவும் காலம் போதாது. எனினும் தமிழுக்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்." என்று அண்மையில் சிதம்பரத்தில் நடைபெற்ற எழுத்தாளர் மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டார். மேலும், "மொழி உயிர்த்தன்மை வாய்ந்தது. பள்ளிக்கூடங்கள் மூலமும், பல்கலைக்கழகங்கள் மூலமும் மொழி வளர்க்கப்பட்டபோதிலும், அது நாம் நினைத்தவண்ணம் விரைவில் வளர்ந்து விடுவதல்ல. அஃது ஒரு நுண்ணிய செடிபோன்றது. இதனை நாம் போற்றி வளர்க்க வேண்டும். அதன்மூலம் மொழிகள் வளரும் வாழ்வும்பெறச் செய்ய வேண்டும். இங்ஙனம் செய்தாற்றான் எழுத்தாளர்கள், கவிஞர்கள், நாவலாசிரியர்கள் ஆகியோர் தம்முடைய எழுத்தும் பணியைச் செவ்வனே செய்யத் தக்க சூழ்நிலையை உண்டுபண்ணியவர்களாவோம்.

மொழி, மக்களுடைய வாழ்க்கையில் ஒரு கூறாகிவிட்டது. மக்களிடையே மொழியார்வம் சிறப்பாக இருப்பதற்கு இதுவே காரணம். எனவே நல்ல எழுத்தாளர்கள் தோன்றும்படி செய்யவேண்டும். அதற்கு மாநாடுகளும், சங்கங்களும், பட்டம் வழங்கலும் போதாது. அறிஞர்கள் தோன்றும்படியான சூழ்நிலையை உண்டுபண்ண வேண்டும். அஃதோடு அறிவாற்றலைத் தடைப்படுத்தும் சூழ்நிலைகளையும் தடுக்க வேண்டும்."

(௫) இலங்கை முதலமைச்சர் தமிழ்மொழிக்குப் பணிவுரை

"அண்மையில் ஆங்கில எலிசபெத் அரசியார் இலங்கைக்கு வந்தபோது, அவருக்குப் பாராட்டுரை நிகழ்த்தியவர்கள் சிங்கள மொழியிலேயே நிகழ்த்தினர். தமிழ்மொழியை அறவே விட்டுவிட்டனர். இதனால் தமிழ்மக்களிடையே வெறுப்புணர்ச்சி தோன்றியுள்ளது. இது குறித்து வருந்துகிறேன். தமிழை அவமதிக்க வேண்டும் என்பது இலங்கை அரசினர் நோக்கமல்ல. சிங்கள மொழிக்குரிய அதே உரிமை தமிழுக்கும் உண்டு," என்று இந்திய எழுத்தாளர் சந்திப்பின்போது கூறினர்.

(௬) தமிழிலேயே பாடங்கள்யாவும் நடத்தல் வேண்டும்

"இந்த நாடு சம்பந்தப்பட்டவரை தமிழ மக்களுக்கு நல்ல முறையில் கல்வி போதிக்கப்படவேண்டுமானால் தமிழ மொழியில்தான் கல்லூரிகளிலும் பாடங்கள் சொல்லிக் கொடுத்தாகவேண்டும். அப்போதுதான் தமிழர்களுக்கு விடுதலை, தமிழுக்கும் உயர்வு.

"கல்லூரிகளில் பாடங்களையெல்லாம் தமிழில் சொல்லிக் கொடுப்பது நிகழக்கூடியதா? என்று கேட்கலாம். தமிழில் எதனையும் எடுத்துச் சொல்லமுடியும் எழுதமுடியும் என்று எடுத்துக்காட்டவே கலைக் களஞ்சியம் வந்திருக்கிறது"—இது, தமிழ்ப் புத்தாண்டுவிழாவிலே, கலைக் களஞ்சியத்தின் முதல் வெளியீட்டைப் பாராட்டும் முறையில் நம் கல்வி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் பேச்சுக்களின் சாரம்.

**குறிப்பு:** சென்னைமாநில அரசியலாரும் அமைச்சரும் சொல்லிய வண்ணஞ் செயலில் கொணர்ந்து பாடங்களைத் தமிழில் நடத்த ஏற்பாடு செய்வதுடன், அதனை விரைவில் ஆட்சிமொழியாக்கி அரியணையிலமர்த்த வேண்டுகின்றோம்.

(எ) குசராத்தியில் தாய்மொழிப் பேரவா

குசராத்தி மொழிதான் பயிற்சி மொழியாகவும், தேர்வு எழுதும் மொழியாகவும் ஆக்கப்படல் வேண்டும் எனக் கடந்த 26-4-54-ல் கூடிய குசராத்திப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு முடிவுசெய்துவிட்டது. இக் கூட்டம் மொழிப்பயிற்சிபற்றி ஆராய்வதற்கெனக் கூட்டப்பட்டதொரு சிறப்புக்கூட்டமாகும். குசராத்தி, அல்லது இந்தி பயிற்சி மொழியாகவேண்டும் என்ற கருத்துக்கொண்டிருந்தனர் ஆட்சியாளர். ஆட்சியாளரின் முடிவு பல்கலைக்கழக ஆட்சிக்குழுவின் தீர்ப்பால் தகர்க்கப்பட்டது. இந்தி கூடாது என்றும் முடிவு செய்யப்பட்டது.

**குறிப்பு:** நாடெங்கும் தத்தம் தாய்மொழியில் வீறுகொண்டு ஆட்சி மொழியாக்க முன்நிற்கின்றனர். தமிழன்மட்டும் தூங்குகின்றான். அந்தோ! நந்தாய்மொழி அரியணையேற வேண்டவா?

(ஐ) பாகிஸ்தானிலும் மொழிப்பற்று

ஆட்சிமொழி பற்றிய போராட்டம் பாகிஸ்தானிலும் தலைகாட்டியுள்ளது. பாகிஸ்தான் முதலமைச்சரும் மௌலி அப்துல் ஹக்கும் 23-4-54-ல் ஆட்சிமொழிபற்றி உரையாடினர். உருதுதான் ஆட்சி மொழியாதல் வேண்டும் என மக்கள்மன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது. உருதும் வங்காளமும் ஆட்சிமொழி ஆகவேண்டும் என முஸ்லீம்லீக் கோருகிறது. உருது ஒன்றுக்குத்தான் இடமுண்டு என்கிறார் மௌலி அப்துல் ஹக்.

**குறிப்பு:** தாய்மொழி அவவர் நாட்டில் ஆட்சிமொழிஆக நடத்தற்குரியது. இதனைத் தமிழநாட்டு ஆட்சியாளர் கவனிப்பாரா?

(க) தாய்மொழிபற்றி 'அரிசன்' ஆசிரியர் கருத்து

பல்கலைக் கழகங்களில் இந்திமொழியைக் கற்பிக்கும் மொழியாக வைத்தால் நாட்டின் ஒற்றுமைக்குக் கெடுதல் விளையும் என்று அரிசன் கிழமைஇதழாசிரியர் திரு. மகனபாய் தேசாய் 21-4-'54-ல் ஆமதாபாத்தில் கற்பிக்கும் மொழிபற்றிய ஆய்வுக்குழுவில் பேசுங்கால் எச்சரிக்கையாகக் கூறினார்.

பின்னும் பல்கலைக்கழகங்களில் அவ்வந்நாட்டு மொழிகளையே கற்பிக்கும் மொழிகளாக ஆக்கினால்தான் உண்மை ஒற்றுமை கண்டு நாடு ஒருமுகப்படுமென்றும் எடுத்துரைத்தார்.

**குறிப்பு:** இந்திமொழி எழுத்துப் பெருக்கமும் முறக்கல், கனைத்தல், உள்ளிழுத்தல், நீள ஒலித்தல் முதலியனவும் மிக்கமொழி. இளஞ் சிறார்கள் எளிதில் கற்கும் இயல்புடையதுமன்று. ஆகவே, நம் நாட்டில் தாய்மொழியாகிய தமிழையே கற்பிக்கும் மொழியாக ஆட்சியாளர் நிலைபெறுத்துதல் வேண்டும். அதுவே, நாடு உயர்ந்து சிறப்புற வழி கோலுவதாகும்.

# மதிப்புரை

## திருச்செந்தூர் வள்ளிமணாளன்கோவில் வரலாறு

[ஆசிரியர்: குலசேகரன்பட்டினம், தமிழகம், சித்தாந்த சைவப் புராணிகரும், கந்தபுராண அருள்மணியுமாகிய திருவாளர் ச. முத்துக் குமாரசாமி பிள்ளை அவர்கள், பக்கம்: அஅ. விலை ரூ. 1.]

இந்நூல் மிக இனிய எளிய நடையில் யாக்கப்பெற்றது. பலவேறு தலைப்புக்கள் பொருத்தமுற அமைக்கப்பெற்றுள்ளன. நக்கீரர் காலந் தொட்டு ஆறுமுகச்சாமியவர்கள் காலம்வரையும் திருச்செந்தூர்த் திருக்கோவிலுக்கு ஆற்றிய திருத்தொண்டுகளும், திருக்கோவிலமைப்பு, நாள்விழாத் திருவிழா நடப்பு முதலிய அனைத்தும் வரன்முறையாகச் செம்மையுற வரையப்பெற்றுள்ளன. அகச்சான்றுகள், கல்வெட்டுக்கள் முதலிய காணப்பெறுவன.

குமரகுருபர அடிகள், ஞானியார், இருவைணவர், பகழிக்கூத்தர், வடமலையப்பபிள்ளையன், கட்டப்பொம்மு, மேடைத்தளவாய், கந்தசாமிப் புலவர், மீராக்கண்ணுப்புலவர், 1803, கலெக்டர் S. R. லூசிங்டன், மலையாளமன்னர், குலசைமூப்பனார், பாண்டித்துரைத்தேவர் முதலிய பல மெய்யடியார்கள் அறுமுகப்பெருமான் திருவருளால் ஆட்கொள்ளப் பெற்று வியத்தகு முறையில் நோய் நீங்கல், கண்பெறல், பொன்பெறல், கடலகத்துவீழ்ந்த பொருள் கையுறப்பெறல், கனவினருளல் முதலிய அருளிப்பாடுற்ற வரலாறுகள் பல காணலாம்.

ஆதிசங்கராச்சாரியார் வடமொழியில் புசங்கம்பாடி நீங்கா நோய் நீங்கி ஆட்பட்டமை காணுந்தோறும் அறுமுகப்பெருமான் ஆருளை வியவாதார் எவருளர்?

சுருங்கச்சொல்லின் இந்நூல் ஓர் அரிய தென்தமிழக வரலாற்று நூலாகவும், திருக்கோவில் வழிபாட்டுமுறை, அறுமுகப்பெருமான் ஆருட்டிறம், விழாமுறை முதலியன விளக்கும் விளக்க நூலாகவும், முன்னுள் நாயன்மார் காலங்களில் நிகழ்ந்த அருட்செயலேபோன்று இந்நாட்களில் அருட்செயல்பலவும் நேரில்கண்டார் உளராகவும் காணப் பெறும் வாய்மை பெரிதும் பாராட்டற்குரியது.

எனவே, இந்நூலைச் செந்தமிழன்பர்களும், செந்நெறிச் செல்வர்களும் வாங்கிக் கற்றும் கற்கச்செய்தும் போற்றுவார்களாக. நூலாசிரியரவர்களை இதுபோன்ற அரும்பெரும் நூல் பல வெளிப்படுத்தி ஊக்குவார்களாக.

---

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பா அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.